வ்யா:—**(பாலென்கோ)** முன்புத்தை ரஸம் பின்னாடுகிறபடி. **(நான்குவேதப் பயன்)** ப்ரமாணஜாதத்தில் ஸாரபூ₄தமான நாலு வேத₃ம். அத₂வா, ப்ரயோஜந ரூபமான நாலு வேத₃ம். **(சமயநீதிநூல்)** வைதி₃க ஸமயத்துக்கு நிர்வாஹகமான ஶாஸ்த்ரம். வேதோ₃பப்₃ரும்ஹணமான இதிஹாஸ புராணாதி₃கள். **(நுடங்கு இத்யாதி₃)** ஶ்ரவண மாத்ரத்திலே ஈடுபடுத்தவல்ல இசை. **(இவற்றுள் நல்ல மேலென்கோ)** இவற்றிலும் விலக்ஷணமான போ₄க்₃யமென்பேனோ ? **(வினை இத்யாதி₃)** அல்பயத்நத்தாலே நிரதிஶயப₂லத்தைத் தருமதென்பேனோ ? ஸாத₄ந ரூபமான யத்நத்தளவல்லாத அதிமாத்ரப₂லமென்பேனோ ? மித்ரபா₄வமடியாக யாவதா₃த்மபா₄வியான அநுப₄வத்தைத் தரும் என்கை. **(கண்ணனென்கோ)** "உனக்கு நானுளேன், மாஶுச: - நீ சோகியாதேகொள்" என்னுமவனென்பேனோ? **(மாலென்கோ)** ஆஶ்ரிதவிஷயத்தில் வ்யாமுக்₃த₄னென்பேனோ ? **(மாயனென்கோ)** தூ₃த்யஸாரத்₂யங்கள் பண்ணும் ஆஶ்சர்யசேஷ்டிதங்களையுடையவனென்பேனோ ? **(வானவராதியை)** ப்₃ரஹ்மாதி₃களுக்கும் ஸத்தாஹேதுவானவனை. தன் ஸத்தை ஆஶ்ரிதாதீ₄நையாயிருக்கும் என்கை. 6.

ஈ— அவ:— ஆறும் பாட்டு. a வேத3ம் தொடக்கமான இயலும் இசையுமான ஶப்3த3ராஶியை விபூ4தியாகவுடையனுயிருக்கிறபடியைப் பேசுகிறார்.

வ்யா:— (பாலென்கோ) b கீழில் ரஸ்யதை பின்னாடினபடி. (நான்கு வேதப் பயனென்கோ) c நாலுவகைப்பட்ட c2 ப்ரமாணஜாதத்தில் ஸாரபூ4தமான வேத3மாகிற ப்ரயோஜநமென்பேனோ? d வேத3த்திலே வேறேயும் ஓரம்ஶம் ஒருவனை ஸ்துதிக்கிலிறே - நான்கு வேத3த்தில் பயனென்கோ என்னவேண்டுவது. e அங்ஙனன்றியே, வேத3ந்தான் - ஆராத4நஸ்வருபஞ்சொல்லுமிடமும் ஆராத்4ய ஸ்வருபஞ்சொல்லுமிடமுமாய்க் கட்டடங்க இவனையே சொல்லுகையாலே, வேத3த்தில் நாலுமூலைக்குமுள்ள e2 ப்ரயோஜநமில்லாத இடமில்லை. f 1. "वेदैश्च सर्वैरहमेव वेद्यः" (வேதை3ஶ்ச ஸர்வைரஹமேவ வேத்3ய:) என்றானிறே. g (சமயம்) வைதி3க

அ— ஆறும் பாட்டு. (பாலென்கோ இத்யாதி3) a "நான்குவேதப்பயனென்கோ" இத்யாதி3யைக் கடாக்ஷித்து அவதாரிகை (வேத3ம் தொடக்கமான இத்யாதி3) b புநருக்தம் கிலேதி ஶங்காம் பரிஹரதி (கீழில் ரஸ்யதை இதி) c பயனான நான்கு வேத3மென்கோ? இதி ஶப்3தா3ர்த்த2:- c2 (ப்ரமாண ஜாதத்தில் இதி) 2. "அங்கா3நி வேதா3ஶ்சத்வாரோ மீமாம்ஸாந்யாயவிஸ்தர:। புராணம் த4ர்மஶாஸ்த்ரஞ்ச வித்3யா ஹ்யேதாஶ்சதுர்த3ஶ ||". c யத்3வா, (நாலுவகைப்பட்ட) நான்கில் வேத3மாகிற பயன் என்றபடி. நாலாவன - ஶ்ருதி ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்கள். அத2வா, ப்ரத்யக்ஷாதி3ப்ரமாணஜாதத்தில் வைத்துக்கொண்டு நாலு வேத3மாகிற ப்ரயோஜநமென்பேனோ? இதி ஶப்3தா3ர்த்த2:. c2 ப்ரமாணஜாதத்தில் என்றது-அர்த்தா2த் வந்தது. d நாலு வேத3மாகிற பயனென்பானென்? நான்குவேத3த்தில் பயனென்றாலோ? என்ன (வேத3த்திலே இத்யாதி3) e அங்ஙனன்றியே என்றது-அப்படி ஒருவனை ஸ்துதியாதே என்றபடி. e2 (ப்ரயோஜநமில்லாதவிடம் இதி) 3. "ஸா கா2தா2 நாராயஶம்ஸ்யப4வத்" இதி— ப4க3வத்பர்யந்தத்வவ்யதிரேகேண கேவலதே3வமநுஷ்யாதி3பரா கா2தா2 மலம் ப4வதீத்யுச்யமாநப்ரதே3ஶ இத்யர்த்த2:. f ஸர்வே வேதா3: பரமாத்மாநமேவ வத3ந்தீத்யத்ர ப்ரமாணம் (வேதை3ஶ்ச ஸர்வை: இதி) 4. "ஸர்வே வேதா3 யத்பத3மாமநந்தி" 5. "ஸர்வே வேதா3 யத்ரைகம் ப4வந்தி" இத்யாத3யஶ்சாத்ர விவக்ஷிதா:. 6. "வேதே3 ராமாயணே சைவ புராணே பா4ரதே ததா2 | ஆதௌ3 மத்4யே ததா2 சாந்தே விஷ்ணுஸ் ஸர்வத்ர கீ3யதே ||" என்னக்கடவதிறே. g (சமயநீதிநூல்) ஸமயமென்று-

ஜீ— ஆறும் பாட்டு. (பாலென்கோ இத்யாதி3) a "நான்குவேதப்பயனென்கோ" இத்யாதி3யைக் கடாக்ஷித்து அவதாரிகை (வேத3ம் தொடக்கமான இத்யாதி3) b புநருக்திபரிஹாரம் (கீழில் இத்யாதி3) c பயனான நான்குவேத3மென்பேனோ இதி ஶப்3தா3ர்த்த2:. c2 (ப்ரமாண ஜாதத்தில் இதி) 2. "அங்கா3நி வேதா3ஶ்சத்வாரோ மீமாம்ஸா ந்யாயவிஸ்தர:। புராணம் த4ர்மஶாஸ்த்ரஞ்ச ||" இத்யாதி3. d நான்குவேத3மாகிற பயனென்பானென்? நான்குவேத3த்தில் பயனென்றாலோ? என்ன (வேத3த்திலே இத்யாதி3) e அங்ஙனன்றியே-அப்படியொருவனை ஸ்துதிக்கையன்றியே. e2 (ப்ரயோஜநமில்லாதவிடமில்லை இதி) ப4க3வத்பர்யந்தத்வவ்யதிரேகேண கேவலதே3வமநுஷ்யாதி3 ப்ரதிபாத3க ப்ரதே3ஶமில்லை என்றபடி. f ஸர்வவேத3ங்களும் அவனையே சொல்லுகிறது என்னுமிடத்தில் ப்ரமாணம் (வேதை3ஶ்ச ஸர்வை: இதி) கீ3தாஸு பஞ்சத3ஶே; பூர்வமேவ

ப்ர— (ஆறும் பாட்டு) (பால் இத்யாதி.) (வேதப்பயனென்கோ) f 1. श्रीभगवद्गीतायाम् पञ्चदशे—"सर्वस्य चाहं हृदि सन्निविष्टो मत्तस्स्मृतिर्ज्ञानमपोहनञ्च। वेदैश्च सर्वैरहमेव वेद्यो वेदान्तकृद्वेदविदेव चाहम्॥१५॥"

ஸ—ஸமயத்துக்கு நிர்வாஹகமான இதிஹாஸபுராணங்களென்பேனோ? h வேத3ார்த்த2த்தை விஶதீ3கரிக்குமவையிறே இவை, i1. 'इतिहासपुराणाभ्यां वेदं समुपबृंहयेत्' (இதிஹாஸபுராணாப்4யாம் வேத3ம் ஸமுபப்3ரும்ஹயேத்). (நுடங்கு) கேட்டாரை நஞ்சுண்டாற்போலே j நுடங்கப்பண்ணக்கடவ ஶ்ரவணத்தையுடைத்தான இசையென்பேனோ? (இவற்றுள் நல்ல மேலெங்கோ) k எல்லாம் சொல்லவேணும், எல்லாம் சொல்மாட்டார். கீழ்ச்சொன்னவற்றிலெல்லாம் விலக்ஷணமாய் அவ்வருகாயிருப்பதொன்று என்பேனோ? (வினையில் மிக்க) l அல்பயத்நத்தாலே அநேகப2லத்தைப் ப2லிப்பதொன்று என்பேனோ? m கலநெல்லை வித்தி நூறாயிரக்கலமாக விளைத்துக்கொள்வாரைப்

அ—ஸித்3த4ாந்தமாய், நயதீதி - நீதி: இதி வா, நீயதே அநயேதி - நீதிரிதி வ்யுத்பத்த்யா வா வைதி3கஸித்3த4ாந்தத்தை நயிப்பிக்கிற, அதாவது - நிர்வஹிக்கிற இதிஹாஸ புராணங்களைச் சொல்லுகிறது: நிர்வாஹகத்வமாவது - விஶதீ3கரிக்கை. h நிர்வாஹகத்வத்தை உபபாதி3க்கிறார் (வேத3ார்த்த2த்தையென்று தொடங்கி) i இதுக்கு ப்ரமாணம் (இதிஹாஸ இத்யாதி3) j நுடங்கப் பண்ணுகையாவது-ஸ்தப்3த4மாக்குகை. அதாவது-துவளுகை. 2. "ஶைலோऽக்3னிஶ்ச ஜலாம்பு3பூ4வ மூஸ்யோ முக்3த4ாம்பு3பூ4வுர் ஜட3ா: ப்ராஜ்ஞாமாஸுரகா3ஸ் ஸகோ3பமம்ருதாமாஸுர் மஹர்ஷயஸ்: | கோ3வ்யாக்4ராஸ்ஸஹஜாம்பு3பூ4வுரபரே த்வர்யாம்பு3பூ4வு: ப்ரபோ4! த்வம் தேஷ்வஸ்பதமாம்பு3பூ4வித3 பு4வத்3வேணுக்வணோன்மாத3நே ||" என்னும்படி பண்ணுகை. k "பாலெங்கோ" இத்யாரப்4ய, கதிசந ப்ரத்யேகமபி4த4ாய, புநஸ்ஸமுத3ாயாகாரேண கிம் அர்த்த2ம் அபி4த3த4ாதி? இத்யத்ராஹ (எல்லாம் இதி) l வினையைப்பற்றவும் அதிஶயிதமான ப்ரயோஜநமென்று ஶப்3த3ார்த்த2மாக விவக்ஷித்து, இத்தால் ப2லிதத்தை அருளிச்செய்கிறார் (அல்பயத்நத்தாலே இத்யாதி3) m இவ்வர்த்த2த்தை த்3ருஷ்டாந்தபூர்வகமாக ஸ்தி2ரீகரிக்கிறார் (கலநெல்லை இத்யாதி3) m3 போலேயென்றதுக்கு - பூர்வவாக்யந்தோடே அந்வயம். n இத்தால் ப2லிதம் (இத்தலையிலுள்ளது இத்யாதி3) o (உனக்கு நானிருந்தேனோ) என்றது - அஹம்

ஜீ—ஸித்3தம். g "கமயம்" என்று-ஸித்3த4ாந்தமாய்; நீயதே அநயேதி-நீதி: என்றாய், அதாவது" நிர்வாஹகமென்றாய், வைதி3கஸித்3த4ாந்தத்துக்கு நிர்வாஹகமான என்றபடி. நூல்-ஶாஸ்த்ரம். நிர்வாஹகத்வமாவது-விஶதீ3கரிக்கை. h நிர்வாஹகத்வத்தை உபபாதி3க்கிறார் (வேத3ார்த்த2த்தை இத்யாதி3) i இதுக்கு ப்ரமாணம் (இதிஹாஸ இத்யாதி3) 1. "பி3பே4த்யல்ப ஶ்ருதாத்3வேதோ3 மாமயம் ப்ரதரிஷ்யதி" இத்யுத்தரார்த்த4ம். இத3ம் பா3ர்ஹஸ்பத்ய ஸ்ம்ருதௌ. j நுடங்க-மயங்க-ஈடுபடும்படி இத்யர்த்த2:. கேட்டமாத்ரத்திலே ஈடுபடுத்தவல்ல கா3நமென்பேனோ இதி நிஷ்க்ருஷ்டார்த்த2:. 2. "ஶைலோக்3னிஶ்ச ஜலாம்பு3பூ4வ மூஸ்யோ முக்3த4ாம்பு3பூ4வுர் ஜட3ா: ப்ராஜ்ஞாமாஸுரகா3ஸ் ஸகோ3பமம்ருதாமாஸுர் மஹர்ஷய: | கோ3வ்யாக்4ராஸ்ஸஹஜாம்பு3பூ4வுரபரே த்வர்யாம்பு3பூ4வு: ப்ரபோ4! த்வம் தேஷ்வஸ்பதமாம்பு3பூ4வித3 பு4வத்3வேணுக்வணோன்மாத3நே ||" என்னும்படி பண்ணுகை-நுடங்கப்பண்ணுகையாவது. k மேலும் விபூ4தியோக3ம் சொல்லாதே, "இவற்றுள் நல்ல" என்று தொடங்கி-நிஷ்க்ருஷ்டரூபத்தைச் சொல்லுவானென்? என்ன (எல்லாம் சொல்ல இத்யாதி3) l வினையைப்பற்றவும் அதிஶயிதமான ப்ரயோஜநமென்று ஶப்3த3ார்த்த2ம் விவக்ஷித்து, இத்தால் ப2லிதமாஹ (அல்பயத்ந இத்யாதி3) m த்3ருஷ்டாந்தமாக விவரணம் (கலநெல்லித்யாதி3) 3. "மித்ரபா4வேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கத2ஞ்சந"

ப்ர—i1. बार्हस्पत्यस्मृतौ – "इतिहासपुराणाभ्यां वेदं समुपबृंहयेत्। बिभेत्यल्पश्रुताद्वेदो मामयं प्रतरिष्यति ॥ ६ ॥"

ஈ—m,போலே, n இத்தலையிலுள்ளது மித்ரபா4வமாய், அதுக்கு 1."न त्यजेयम्"(ந த்யஜேயம்)என்னும்படியிருக்கை. (கண்ணனென்கோ) o"உனக்கு o2 நானிருந்தேனே"என்று 2. "मा शुचः" (மா ஶுச:) என்னும் க்ருஷ்ணன் என்பேனோ? p "நாம் தருமத்தை நீ p2 விலக்காதே ஸ்வீகரிக்குமித்தனையே வேண்டுவது. உனக்கு நானிருந்தேன்" என்னுமவனிறே. (மாலென்கோ) / (ஆஶ்ரிதவிஷயத்தில் வ்யாமுக்3த4னென்பேனோ) q இப்பாசுரத்தைச்சொல்லா, 3. "इदं ते नातपस्काय" (இத3ம் தே நாதபஸ்காய) என்னும் q2 வ்யாமுக்3த4னென்பேனோ? r4. 'इदं तु ते गुह्यतमं प्रवक्ष्यामि' (இத3ம் து தே கு3ஹ்யதமம் ப்ரவக்ஷ்யாமி) என்றவோபாதி, 3. "इदं ते नातपस्काय" (இத3ம் தே நாதபஸ்காய) என்றதுவும் முன்னே சொல்லிக்கொள்ளவிறே அடுப்பது. அங்ஙனன்றிக்கே, முந்துறச்சொல்லி, பின்னை 3."इदं ते नातपस्काय"(இத3ம் தே நாதபஸ்காய)

அ—ஶப்3தா3ர்த்த2ம். த்ருதீயபாதா3ர்த்த2மாகவுமாம். p நைஷ்டி2கபதா3தாத்பர்யகத2நபூர்வகமாக உக்தார்த்த2த்தை அநுபா4ஷிக்கிறார் (நாம் தருமத்தை என்று தொடங்கி) தருமத்தையாவது - தருகிற ப2லத்தை என்றபடி. யத்3வா, ப்ரஸ்துதஸ்ய சரமஶ்லோகஸ்யார்த்த2மாஹ (நாம் தருமத்தை இதி) p2(விலக்காதே) 2."ஸர்வத4ர்மாந்". q இப்பாசுரத்தை என்றது-சரமஶ்லோகத்தை. q2 வ்யாமோஹம் என்றது-த்3ரௌபதி3யினிடத்தில் வ்யாமோஹம்; q(இப்பாசுரத்தை)இத்யாதி3க்குத் தாத்பர்யம் - உபதே3ஶித்த அநந்தரம் "இத்தை உபதே3ஶித்துவிட்டோமே" என்று 3. "இத3ம் தே நாதபஸ்காய" என்று அநுதபிக்கவேண்டும்படியான பரமரஹஸ்யத்தை வெளியிடவேண்டும் படி ஆஶ்ரிதரிடத்தில் வ்யாமோஹத்தையுடையன் என்பேனோ? என்றபடி; r.s,t வ்யாமோஹத்தாலே இப்பாசுரத்தைச் சொன்னான் என்னுமதுக்கு ஆப்தஸம்வாத3ம் காட்டுகிறார் (இத3ம் து தே என்று தொடங்கி) s,t (என்றானிறே) என்றது - கீழுக்கு ஶேஷமாய், (இதுதனக்கு இத்யாதி3) ஸம்வாத3மாகவுமாம். t (இதுதனக்கடியென் என்று இதி) அர்ஜுநவிஷயவ்யாமோஹோ வா,

ஜீ—இத்யாதி3 யுத்3த4காண்டே3 அப4யப்ரதா3நப்ரகரணே ராமவாக்யம். o2 (நானிருந்தேனே) என்றது-அஹம்ஶப்3தா3ர்த்த2ம். p பூர்வார்த்த4த்தில் அர்த்த2த்தையுங்கூட்டி விவரிக்கிறார் (நாம் தருமத்தை இத்யாதி3) தருமத்தை - தருகிற ப2லத்தை. q இப்பாசுரத்தை-சரமஶ்லோகத்தை. q2 வ்யாமுக்3த4ன் - ஆஶ்ரிதர்பக்கல் வ்யாமோஹத்தையுடையவன். r இது வ்யாமோஹ கார்யமாக வேணுமோ? என்ன (இத3ம் து தே இத்யாதி3) 3. "இத3ம் தே நாதபஸ்காய நாப4க்தாய கதா3சந | ந சாஶுஶ்ருஷவே வாச்யம் ந ச மாம் யோऽப்4யஸூயதி ||" 4. "இத3ம் து தே கு3ஹ்யதமம் ப்ரவக்ஷ்யாம்யநஸூயவே | ஜ்ஞாநம் விஜ்ஞாநஸஹிதம் யத் ஜ்ஞாத்வா மோக்ஷ்யஸேऽஶுபா4த் ||". s,t வ்யாமோஹத்தாலே சரமஶ்லோகத்தைச் சொன்னான் என்றதுக்கு ஸம்வாத3ம் (இது தனக்கு இத்யாதி3) "மால்" என்ற வ்யாமோஹம் - த்3ரௌபதி3விஷயம் என்றபடி. t2 அநுஸந்தி4யா-அநுஸந்தி4த்தவுடனே. t2 பதண்பதனென்றான் - நடுங்கினான். v நூறுபோனதுக்கு

ப்ர— 1. युद्धकाण्डे (१८) अभयप्रदानप्रकरणे "मित्रभावेन संप्राप्तं न त्यजेयं कथंचन। दोषो यद्यपि तस्य स्यात् सतामेतदगर्हितम्॥ ३॥

2.(கண்ணனென்கோ) भगवद्गीतायाम् (१८) "सर्वधर्मान्" इत्यादि॥ ६६॥

3.(மால்) श्रीभगवद्गीतायां अष्टादशे "इदं ते नातपस्काय नाभक्ताय कदाचन। नचाशुश्रूषवे वाच्यं न च मां योऽभ्यसूयति॥ ६७॥"

4. (ஷை 9) "इदं तु ते गुह्यतमं प्रवक्ष्याम्यनसूयवे। ज्ञानं विज्ञानसहितं यद् ज्ञात्वा मोक्ष्यसेऽशुभात्॥ १॥"

/() சில ப்ரதிகளிலேயே.

ஈ-ளென்ருனிறே t"இதுதனக்குஅடியென்?" என்று ஜீயர் ப4ட்டரைக்கேட்க; "த்3ரௌபதி3 குழலை விரித்துக்கிடக்கையாலே அது முடிக்கைக்காக, செய்வது அறியாமையாலே மூலையில் கிடந்தாரை முற்றத்தேயிட்டான்; பின்னை அர்த்த2த்தின் சீர்மையை t2அநுஸந்தி4யா, 'ஆரதி4காரிகளாகச் சொன்னோம்? கைப்பட்ட மாணிக்கத்தைக் கடலிலேயிட்டோம்' என்று, t3'பதண்பதண்' என்ருன்காணும்" என்று அருளிச் செய்தார். (மாயனென்கோ) ஆஶ்ரிதர்க்கு தூ3த்யஸாரத்2யாதி3களைப் பண்ணும் u ஆஶ்சர்யபூ4தனென்பேனோ? v1. "कृतार्था भुञ्जते दूताः" (க்ருதார்த்த2ா பு4ஞ்ஜதே தூ3தா:). (வானவராதியையே) w ப்3ரஹ்மாதி3களுடைய ஸத்தாதி3கள் தன்னதீ4நமாம்படி யிருக்கிறவன் w2 என்னதீ4நமான ஸத்தாதி3களையுடையனுயிருக்கிற இருப்பை நான் x எத்தையென்று சொல்லுவது? 6.

அ—த்3ரௌபதீ3விஷயவ்யாமோஹோ வா, அந்யத்3வேதி ஶங்கிதுரபி4ப்ராய:. u ஆஶ்சர்யம் நாம- உப4யவிபூ4திநாத2ஸ்ய ஸ்வமநஸாபி தூ3தத்வேநைவ ஸ்மரணம். v அவன் தூ3த்யம்பண்ணினமையுண்டோ; இரண்டு வர்க்க3த்துக்கும் ப3ந்து4வாகையாலே, இவர்களுக்கு வ்யாஸாதி3கள் சொன்னவோபாதி ஹிதம் சொன்னவித்தனையிறே என்ன (க்ருதார்த்த2ா இத்யாதி3) அதாவது- தூது எழுந்தருளினபோது, து3ர்யோத4நன் "என்னகத்திலே அமுதுசெய்யவேணும்" என்ன, "தூதுவந்தவன் தான் வந்த கார்யமானுல் தூதுவந்த க்3ருஹத்திலே பு4ஜிக்கும்; அப்படியே நானும் உன்னிடத்திலே தூதுவருகையாலே நான்வந்த கார்யம் செய்தால் உன்னகத்திலே பு4ஜிக்கிறேன் என்ருன்" என்றபடி. w"மாயனென்கோ" என்றதுக்குச் சேர தாத்பர்யம் (ப்3ரஹ்மாதி3கள் இத்யாதி3) w2ஆஶ்ரிதர்க்குள்ளே தாமும் அந்தர்ப்பூ4தராகையாலே (என்னதீ4நமான ஸத்தாதி3களையுடையன்) என்றது; "மாலென்கோ மாயனென்கோ" இத்யத்ர ஹ்ருத3யம். x(எத்தையென்று சொல்லுவது) எவ்வளவென்று பரிச்சே2தி3த்துச் சொல்லுவது? வானவராதியை - பாலென்கோ என்று தொடங்கி அந்வயம். பாலென்கோ - வேத3ங்களினுடைய ஶாக2ாதி3விப4ாக3ங்கள். பாலென்று - பகுதியாய், ஶாக2ாதி3விப4ாக3த்தைச் சொல்லுகிறது. நான்குவேதப் பயனென்கோ, தத2ாவித4சதுர்வித4வேத3ங்களின் ப்ரயோஜநம். சமயநீதிநூல் - அர்த்த2வ்யவஸ்த2ாபகமான ந்யாயத்துக்கு ப்ரதிபாத3கமாயுள்ள மீமாம்ஸா ஶாஸ்த்ரம் என்றுமாம். 6.

ஜீ—ப்ரமாணம் (க்ருதார்த்த2ா இத்யாதி3) உத்3யோக3பர்வணி சதுர்நவதிதமே, "மத்3 க்3ருஹே பு4ங்க்ஷ்வ:" இத்யுக்தவந்தம் து3ர்யோத4நம் ப்ரதி க்ருஷ்ண: — 1. "க்ருதார்த்த2ா பு4ஞ்ஜதே தூ3தா: பூஜாம் க்3ருஹ்ணந்தி சைவ ஹி | க்ருதார்த்த2ம் மாம் ஸஹாமாத்யஸ்த்வமர்ச்சிஷ்யஸி ப4ாரத ||" இதுக்கு அர்த்த2ம் - க்ருஷ்ணன் தூது எழுந்தருளினபோது, து3ர்யோத4னன் "என்னகத்திலே அமுதுசெய்யவேணும்" என்ன; "தூதுவந்தவன் தான் வந்த கார்யமானுல் தூதுவந்த க்3ருஹத்திலே பு4ஜிக்கும், அப்படியே நானும் உன்னிடத்தில் தூதுவருகையாலே நான் வந்த கார்யம்செய்தால் உன்னகத்திலே பு4ஜிக்கிறேன் என்ருன்" என்றபடி. w"மாயனென்கோ" என்றதுக்குச் சேர ப4ாவம் (ப்3ரஹ்மாதி3கள் இத்யாதி3) w2ஆஶ்ரிதர்க்குள்ளே தாமும் அந்தர்ப்பூ4தராகையாலே (என்னதீ4நமான ஸத்தாதி3களையுடையனென்று) x (எத்தையென்று சொல்லுவது) எவ்வளவென்று பரிச்சே2தி3த்துச் சொல்லுவது? வானவராதியை-பாலென்கோ இத்யாரப்4ய அந்வய:. 6.

ப்ர—1. उद्योगपर्वणि चतुर्नवतितमे "मद्गृहे भुङ्क्ष्व" इत्युक्तवन्तं दुर्योधनं प्रति कृष्णः— "कृतार्था भुञ्जते दूताः पूजां गृह्णन्ति चैव हि। कृतार्थं मां सहामात्यस्त्वमर्चिष्यसि भारत॥ १८½॥"

7. வானவ ராதி யென்கோ வானவர் தெய்வ மென்கோ
வானவர் போக மென்கோ வானவர் முற்று மென்கோ
ஊனமில் செல்வ மென்கோ வூனமில் சுவர்க்க மென்கோ
ஊனமில் மோக்க மென்கோ வொளிமணி வண்ண னையே.

ஆ— 7. வ்யா:— வானவருடைய த₃ாரகமென்று சொல்லுவேனோ? அவருடைய தை₃வமென்று சொல்லுவேனோ? அவர்களுடைய போ₄க₃மென்று சொல்லுவேனோ? அவர்களுடைய ஸர்வஸ்வமென்று சொல்லுவேனோ? ஐஹிகமான பூர்ண ஸம்பத்துக்கு ஆத்மபூ₄தனென்று சொல்லுவேனோ? பூர்ணஸ்வர்க்க₃ புருஷார்த்த₂த்துக்கு ஆத்மபூ₄தனென்று சொல்லுவேனோ? பரமபுருஷார்த்த₂ லக்ஷணமோக்ஷத்துக்கு ஆத்மபூ₄தனென்று சொல்லுவேனோ? இவனை எங்ஙனே சொன்னால் பூர்ணமாகச் சொல்லிற்றாவது? என்கிறார். 7.

ஈ— அவ:— ஏழாம் பாட்டிலே—ஐஶ்வர்யாதி₃ புருஷார்த்த₂ங்கள் எல்லாவற்றையும் விபூ₄தியாக உடையனாயிருக்கிறபடியைப் பேசுகிறார்.

வ்யா:— (வானவர் என்று தொடங்கி) A அயர்வறும் அமரர்களுக்கு ஸ்வரூபஸ்தி₂த்யாதி₃களும் மற்றுள்ளன எல்லாமென்பேனோ? (ஊனமில் என்று தொடங்கி) பரிபூர்ணமான மோக்ஷாதி₃ புருஷார்த்த₂மென்பேனோ? (ஒளி மணிவண்ணனை) விலக்ஷணமான அழகையுடையவனை. 7.

ப— 7. அவ:— அநந்தரம், போ₄க₃மோக்ஷ விபூ₄தித்வத்தை அருளிச்செய்கிறார்.

ஒளி—உஜ்ஜ்வலமான, **மணி**—மாணிக்கம்போலேயிருக்கிற, **வண்ணனை**—வடிவையுடையவனை, **வானவர்**—(போ₄க₃ஸக்தரான) தே₃வர்களுக்கு, **ஆதி**—உத்பாத₃கன், **வானவர்**—அவர்களுக்கு, **தெய்வம்**—ஆராத்₄யதை₃வதம், **வான**

ஆதே₃— ஆறும் பாட்டு. பாலென்பேனோ? நாலுவகைப்பட்ட வேத₃ம் தொடக்கமான ப்ரமாணஜாதத்தில் ஸாரபூ₄தமான வேத₃மாகிற ப்ரயோஜநமென்பேனோ? வைதி₃கஸமயத்துக்கு நிர்வாஹகமான இதிஹாஸபுராணமென்பேனோ? கேட்டாரை மயங்கப்பண்ணக்கடவ ஶ்ரவணத்தையுடைத்தான க₃ாநமென்பேனோ? கீழ்ச் சொன்னவை எல்லாத்திலும் விலக்ஷணமாய் அவ்வருகாயிருப்பதொன்றென்பேனோ? அல்பயத்நத்தாலே அநேகப₂லத்தைப் ப₂லிப்பதொன்றென்பேனோ? 1. "மாஸாநாம்" என்னும் க்ருஷ்ணனென்பேனோ? இதைச் சொல்ல 2. "இத₃ம் தே நாதபஸ்காய" என்னும் வ்யாமுக்₃த₄னென்பேனோ? ஆஶ்ரிதர்க்கு து₃ஷ்யஸாரத்₄யாதி₃களைப் பண்ணும் ஆஶ்சர்யபூ₄தனென்பேனோ? ப்₃ரஹ்மாதி₃களுடைய ஸத்தாதி₃கள் தன்னதீ₄நமாயிருக்கிறவனை எத்தைச் சொல்லுவது? என்கிறார் "பாலென்கோ" இத்யாதி₃யால். 6.

A 1.1-1.

ப—**வர்**—அவர்களுக்கு, **போகம்**—(ஆராத₄நப₂லமான) போ₄க₃ம், **வானவர்**—அவர்களுடைய, **முற்றும்**—ஸர்வவித₄ரக்ஷணம், **ஊனமில்**—அநஶ்வரமான, **செல்வம்**—ஐஶ்வர்யம், **ஊனமில்** — ஆகல்பாவஸாநஸ்தா₂யியான, **சுவர்க்கம்** — ஸ்வர்க்க₃ஸ்தா₂னம், **ஊனமில்**—(இந்த போ₄க₃த்துக்கு அவ்வருகுபட்ட கைவல்யம்போலன்றியே) அஸங்குசிதமான, **மோக்கம்**—மோக்ஷாநந்த₃ம், **என்கோ**—என்பேனோ ?

"வானவர் என்றவிடம் - ஸூரிகளைச் சொல்லுகிறது" என்பாரும் உளர். 7.

இ— அவ:— ஏழாம் பாட்டில் — ஐஶ்வர்யாதி₃ புருஷார்த்த₂ங்களை விபூ₄தியாகவுடையனாயிருக்கிறபடியைச் சொல்லுகிறார்.

வ்யா:— **(வானவராதியென்கோ)** நித்யஸூரிகளுக்கு ஸத்தாஹேதுவென்பேனோ? அவர்களுக்கு A சூட்டுநன்மாலைப்படியே ஆராத்₄யனென்பேனோ? அவர்களுக்கு B உண்ணும்சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையும் எல்லாமானவன். **(முற்றும்)** அநுக்தமான ஸர்வவித₄பதா₃ர்த₂மும். **(ஊனமில் செல்வம்)** அநஶ்வரமான ஸம்பத்து. **(ஊனமில் சுவர்க்கம்)** "த்₄ருவம்ஸ" என்னுத ஆகல்பாவஸாநமான ஸ்வர்க்க₃ம். **(ஊனமில் மோக்கம்)** ஆத்மாநுப₄வமாத்ரமன்றிக்கே பரமபுருஷார்த்த₂லக்ஷணமோக்ஷம். **(ஒளி மணிவண்ணனை)** ஶ்லாக்₄யமான மணிபோலேயிருக்கிற திருநிறத்தையுடையவனை; விலக்ஷணமான அழகையுடையவன் என்கை. கீழ்ச்சொன்னவையோடு இவ்வழகோடு வாசியற அநுப₄விக்கிறார். 7.

ஈ— அவ:— ஏழாம் பாட்டு. a ஐஶ்வர்யாதி₃ புருஷார்த்த₂ங்களெல்லாம் தனக்கு விபூ₄தியாகவுடையனாயிருக்கிறபடியைப் பேசுகிறார்.

வ்யா:— (வானவராதியென்கோ) கீழ், **"வானவராதி" என்றவிடம்-b ப்₃ரஹ்மாதி₃களுக்குக் காரணபூ₄தனென்னுமிடம் சொல்லிற்று; இங்கு - நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனாய், அவர்கள் ஸத்தாஹேதுவாயிருக்கும்படியைச் சொல்லுகிறது. c இரண்டிடத்திலும் ஶப்₃த₃மொத்திருக்க d இவ்விபா₄க₃ம்பண்ணித் தருவாரானென்னில்;**

அ— ஏழாம் பாட்டு. (வானவராதி இத்யாதி₃) a "ஊனமில் செல்வம்" இத்யாதி₃யைக் கடாக்ஷித்து அவதாரிகை (ஐஶ்வர்யாதி₃ இத்யாதி₃) b ப்₃ரஹ்மாதி₃களைச் சொன்னால், "வானவர் போகம்" என்றத்தோடே தட்டுதல் பிறக்குமென்று விவக்ஷித்து அருளிச்செய்கிறார் (ப்₃ரஹ்மாதி₃களுக்கு இத்யாதி₃) c இரண்டிடத்திலும்-இரண்டுபேரிடத்திலும் என்றபடி. அன்றிக்கே, கீழும் இவ்விடத்திலும் என்றபடி. d (இவ்விபா₄க₃ம் இதி) பூர்வக₃ாத₂யாம்-ப்₃ரஹ்மாத₃யோऽபி₄தீ₄யந்தே, அத்ர ஸூரய இதி விபா₄க₃ம். e (அவ்வளவன்றிக்கே இதி) "வானவர்போகமென்கோ,

ஜீ— ஏழாம் பாட்டு. (வானவர் இத்யாதி₃) a "ஊனமில் செல்வம்" இத்யாதி₃யைக் கடாக்ஷித்து அவதாரிகை (ஐஶ்வர்யாதி₃ இத்யாதி₃) c இரண்டிடத்திலும்-கீழும் இவ்விடத்திலும். d(இவ்விபா₄க₃ம்)கீழ்-ப்₃ரஹ்மாதி₃பரம், இங்கு-ஸூரிபரமென்கிற விபா₄க₃ம். e ப்₃ரஹ்மாதி₃களைச் சொல்லில், "வானவர்போகம்" இத்யாதி₃ சேராது, ஆனபின்பு-"வானவர்போகம்" இத்யாதி₃

A திருவிருத்தம் 21. B 6-7-1.

ஈ—ப்ரஹ்மாதிகளுக்கு அவர்கள் உத்பத்தியிலே உபகரித்துவிடுமித்தனை; e அவ்வளவன்றிக்கே நித்யஸம்ஸாரிகளுக்கு, e1 A "எல்லாம் கண்ணன்" என்கிறபடியே e2 எல்லாம் தானேயாயிருக்கும். f அவர்கள்தாங்களும், 1. "वासुदेवस्सर्वम्" (வாஸுதேவஸ்ஸர்வம்) என்கிறபடியே, எல்லாம் தானேயாக நினைத்திருப்பர்கள். (வானவராதியென்கோ) நித்யஸம்ஸாரிகளுக்கு ஸத்தாஹேதுவானவனென்பேனோ? ஸத்தாஹேதுவாகையாவதென்? அது பின்னை g நித்யையாயன்றோ இருப்பது என்னில்; h நித்யையாகவுமாம், அநித்யையாகவுமாம்; h1 அவனுடைய நித்யேச்சையாலேயிருக்கும் இதினுடைய நித்யத்வம்; i அந்த இச்சை நெகிழில் இதினுடைய நித்யத்வமும் மாறும்படியாயிருக்கும். j, B "எத்தேவர் வாலாட்டும் எவ்வாறு செய்கையும் அப்போதொழியும்" என்கிறபடியே.

அ—வானவர்முற்றுமென்கோ" இதி பதத்வயமேவ ஏதாத்ருஶவிபாகஜ்ஞாபகம் இதி பாவ:. e1 (எல்லாம் கண்ணன் இதி) A "உண்ணுஞ்சோறு" இத்யாதி எல்லாம் தானேயாயிருக்கும்-தாரகபோஷகபோக்யங்களெல்லாம் தானேயாயிருக்குமென்று ஸங்கல்பித்துக்கொண்டிருக்கும். f A "எல்லாம் கண்ணன்" என்று அர்த்தஸ்திதி அப்படியானாலும், அவர்களுக்கு அந்நினைவில்லாவிடில் ப்ரயோஜநமில்லையேயென்ன (அவர்கள்தாங்களும் என்று தொடங்கி) g (நித்யையாயன்றோ இதி) விபூதிவிவக்ஷயா ஸ்த்ரீலிங்கநிர்த்தேஶ:. h (நித்யையாகவுமாம் அநித்யையாகவுமாம் என்று) அநந்தரம், ததநீநம் என்னுமதுக்குக் குறையில்லையென்று ஶேஷம். h1 (அவனுடைய நித்யேச்சையாலே இதி) 2. "இச்சாத ஏவ தவ விஶ்வபதார்த்தஸத்தா" இத்யாதி. i தாததீநத்வத்தையுபபாதிக்கிறார் (அந்த இச்சையென்று) j அவனுபேக்ஷித்தால் இவர்களுக்கு ஸத்தையில்லையென்னுமதுக்கு ப்ரமாணம் (எத்தேவர் இத்யாதி) நான்முகன் திருவந்தாதி. B "அகைப்பில் மனிசரை" இத்யாதி. ஸர்வேஶ்வரன் உபேக்ஷித்து எழவாங்கிநிற்குமாகில், எத்தனையேனும் தங்களைப் பொலிய நினைத்திருக்கும் ப்ரஹ்மாதிதேவர்களுடைய, மூக்கு வாலெடுத்தாற்போலே உண்டான கர்வமும், அவர்களைக் குறித்து இங்குள்ளவர்கள் பஹுவிதமான யாகாதிஸாதநங்களை அநுஷ்டிக்குமதுவும், அவ்வோ கர்மங்களை அநுஷ்டிக்குமிடத்தில் 3. "ப்ரஹ்மாணமாவாஹயாமி இந்த்ரமாவாஹயாமி" என்றாற்போலே உண்டான தத்தத்தேவதாஹ்வாநங்களும் அவன் எழவாங்கின அந்த க்ஷணத்திலே இன்றிக்கே போய்விடும். வாலாட்டு - கர்வம், ஆறு-ஸாதநாநுஷ்டாநம். k ஆஶ்ரயணீயன்-

ஜீ—பதத்வயமே இவ்விபாகஜ்ஞாபகம் என்று கருத்து. e2 எல்லாம் தானேயாயிருக்கும்-தாரக போஷகபோக்யங்கள் எல்லாம் தானேயாயிருக்கும். f அர்த்தஸ்திதி அப்படியானாலும் அவர்க்கு அந்நிலையில்லாவிடில், ப்ரயோஜநமில்லையே என்ன (அவர்கள்தாங்களும் இத்யாதி) h1 நித்யேச்சையாலே இத்யத்ர - 2. "இச்சாத ஏவ தவ விஶ்வபதார்த்தஸத்தா" இத்யாதி அநுஸந்தேயம். i தாததீநத்வோபபாதநம் (அந்த இச்சை இத்யாதி) j அவனுபேக்ஷித்தால் ஸத்தையில்லை என்னுமதுக்கு ப்ரமாணம் (எத்தேவர் இத்யாதி) நான்முகன் திருவந்தாதி. B "அகைப்பில்" இத்யாதி; உகைக்குமேல் - உபேக்ஷிக்குமாகில், எத்தேவர் - எத்தனையேனும் தங்களைப் போரப்பொலிய நினைத்திருக்கும் ப்ரஹ்மாதிதேவர்களுடைய, வாலாட்டும் - கர்வமும், (எவ்வாறு செய்கையும்) ஆறு - ஸாதநாநுஷ்டாநம்; அவர்களை உத்தேஶித்து இங்குள்ளவர்கள் பஹுவிதமான யாகாதிஸாதநங்களை அநுஷ்டிக்குமதுவும், அழைப்பு - "இந்த்ர ஆகச்ச, ஹரிவ ஆகச்ச" என்றழைக்கையும், அவ்வோ கர்மங்களை அநுஷ்டிக்குமிடத்தில் 3. "ப்ரஹ்மாணமாவாஹயாமி" என்றாற்போலேயுண்டான தத்தத்தேவதாஹ்வாநங்களும், அப்போது - அவனுபேக்ஷித்த அந்த க்ஷணத்திலே, ஒழியும் - இன்றிக்கே போய்விடும்.

 A 6-7-1. B நான்-திருவ 38.

ஈ—அவன் நெகிழ்ந்தவன்று பின்னை இல்லையிறே; (வானவர் தெய்வமென்கோ) அவர்களுக்கு k ஆஶ்ரயணீயனென்பேனோ? (வானவர் போகமென்கோ) அவர்களுக்கு A உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாமானவன் என்பேனோ! (வானவர் முற்றுமென்கோ) அவர்களுக்கு l அநுக்தமான எல்லாமென்பேனோ! m (ஊனமில் செல்வமென்கோ) சிலநாள் நின்று வற்றுமதன்றிக்கே, ஒருநாளும் அழியாத ஸம்பத்தென்பேனோ? n (ஊனமில் சுவர்க்கமென்கோ) சில நாள் இருந்து பின்னை o "த்4வம்ஸ" என்று தள்ளும்படியானதன்றிக்கே ஒழிவில்லாத ஸ்வர்க்க3மென்பேனோ? p இவைதானும் அவனுக்கு விபூ4தியன்றோ; இங்ஙன் சொல்லுவானென்? என்னில், 1. "श्रीमदूर्जितमेव वा" (ஸ்ரீமதூ3ர்ஜிதமேவ வா) என்று விஶேஷித்துச் சொல்லாநின்றதிறே. q (ஊனமில் மோக்கமென்கோ) r ப்ரகாரமான ஆத்மாநுப4வ

அ—ஆராத்4யன். " 'வானவராதியென்கோ, வானவர்தெய்வமென்கோ, வானவர்போகமென்கோ' என்கிற இத்தால் - திருமந்த்ரத்தில் பத3த்ரயோக்தமான ஶேஷித்வ ஶரண்யத்வ ப்ராப்யத்வங்களைச் சொல்லுகிறது" என்று அருளிச்செய்வர். l (அநுக்தமான எல்லாம்) என்றது-அநுக்தமான ஸகலவித4ப3ந்து4வும் என்றபடி. m (ஊனமில் செல்வம்) மநுமாந்தா4த்ராதி3பி4ர்பு4க்ததீ3ர்க்க4 காலைஶ்வர்யம்; n (ஊனமில் சுவர்க்கம்) த்4ருவபதா3தி3; q "ஊனமில் மோக்கம்" இத்யநேந கைவல்யம் வ்யாவர்த்யதே. 2. "ஜராமரணமோக்ஷாய" இத்யஸ்ய - 3. "ப்ரக்ருதிவியுக்தாத்ம தர்ஶநாய" இதி வ்யாக்2யாதம் பா4ஷ்யகாரை:; தச்ச 4. "பே4ாகா3 இமே விதி4ஶிவாதி3 பத3ஞ்ச கிஞ்ச ஸ்வாத்மாநுபூ4திரிதி யா கில முக்திருக்தா" இத்யாதி3கஞ்சாத்ர ப்ரமாணம். n,o "சுவர்க்கம்" என்று - ஸ்வர்க்கா3நுப4வத்தைச் சொல்லுகிறது. (த்4வம்ஸ என்று தள்ளும்படியானதன்றிக்கே) என்கையாலே. p "ஊனமில்" இதி கிமர்த்த2ம் விஶேஷ்யதே? அல்பாஸ்தி2ரைஶ்வர்யாதி3கஞ்ச தத்3விபூ4திபூ4தம் ந கிம்? இத்யபி4ப்ராயேண ஶங்கதே (இவைதானும் இதி) q,r ஊனமுண்டான மோக்ஷமென்று - கைவல்யத்தைச் சொல்லுகிறதாக்கி, ஊனமுண்டென்றது - அநித்யத்வத்தைப்பற்றவன்று, ப்ரகாரமான ஆத்மாநுப4வமாத்ரமாகையைப்பற்ற என்று அருளிச்செய்கிறார் (ப்ரகாரமான என்று தொடங்கி) r2 (அநுஸந்தி4க்கையாலே)

ஜீ—k ஆஶ்ரயணீயன் - ஆராத்4யன். "வானவராதியென்கோ" இத்யாதி3 பத3த்ரயத்தாலும் ஶேஷித்வ ஶரண்யத்வ ப்ராப்யத்வங்களைச் சொல்லுகிறது. l அநுக்தமானவெல்லாம் - அநுக்தமான ஸர்வவித4 ப3ந்து4வும். n,o "சுவர்க்கம்" என்று-ஸ்வர்க்கா3நுப4வத்தைச் சொல்லுகிறது. (த்4வம்ஸ என்று தள்ளும்படியானதன்றிக்கே) என்றிருக்கையாலே. m "செல்வம்" என்று - இஹலோகைஶ்வர்யம். p (இவைதானும் அவனுக்கு விபூ4தியன்றோ) என்றது - ஊனமுண்டான ஐஶ்வர்யாதி3களும் அவனுக்கு விபூ4தியன்றோ, "ஊனமில்" என்று விஶேஷிப்பானென்? என்னில் என்றபடி. q "ஊனமில் மோக்கம்" என்றவிடத்திலே, ஊனமென்று-ஸங்கோசத்தைச் சொல்லுகிறது. இத்தால்-கைவல்யவ்யாவ்ருத்தி. s விபூ4தியைச் சொல்லுகிறவிடத்திலே, "ஒளிமணிவண்ணன்" என்கிறதென்? என்ன (இவ்வஸாதா4ரண இத்யாதி3) ஒளிமணிவண்ணனை-வானவராதியென்கோ இத்யாரப்4யாந்வய:. 1. "யத்3யத்3விபூ4திமத் ஸத்த்வம் ஸ்ரீமதூ3ர்ஜிதமேவ வா। தத்ததே3வாவக3ச்ச2 த்வம் மம தேஜோம்ஶஸம்ப4வம் ॥" இதி கீ3தாஸு த3ஶமே. 7.

ப்ர— 1. श्रीभगवद्गीतासु दशमे — "यद्यद्विभूतिमत्सत्त्वं श्रीमदूर्जितमेव वा। तत्तदेवावगच्छ त्वं मम तेजोंऽशसम्भवम् ॥ ४१ ॥"

A 6-7-1.

8. ஒளிமணி வண்ண னென்கோ ஒருவனென் றேத்த நின்ற
நளிர்மதிச் சடைய னென்கோ நான்முகக் கடவு ளென்கோ
அளிமகிழ்ந் துலக மெல்லாம் படைத்தவை யேத்த நின்ற
களிமலர்த் துளவ னெம்மான் கண்ணனை மாய னையே.

ஆ— 8. வ்யா:— (ஒளி மணிவண்ணன்) ஸர்வலோக ஸம்ரக்ஷணைகபோ4க3னும், ஸர்வஜக3த்ஸ்ரஷ்டாவாய், சதுர்முக2ாதி3 ஸர்வஜனைஸ் ஸம்ஸ்துயமானனுயிருக்கும் களிமலர்த் துளவனெம்மான் கண்ணனை மாயனை நிரவதி4க ஸௌந்த3ர்ய மஹோத3தி4 யென்று சொல்லுவேனோ? லோகமெல்லாம் ஐஶ்வர்யத்தினாலே அத்3விதீயனென்று சொல்லி ஏத்தும்படி ருத்3ரனுக்கு ஐஶ்வர்யத்தைக்கொடுத்து அவனுக்கு ஆத்மபூ4தனானவன் என்று சொல்லுவேனோ? சதுர்முகா2ந்தராத்மபூ4தன் என்று சொல்லுவேனோ? எங்ஙனே சொல்லுவேன்? என்கிறார். 8.

ஈ— அவ:— எட்டாம் பாட்டில் — ஜக3த்ப்ரதா4நரான ப்3ரஹ்மருத்3ராதி3களை விபூ4தியாகவுடையனானபடியைப் பேசுகிறார்.

வ்யா:— (ஒருவனென்று ஏத்த நின்ற நளிர்மதிச் சடையனென்கோ) ப்ரதா4நனென்று ஏத்துகைக்குப் பாத்தமுண்டாய்நின்ற ருத்3ரனென்பேனோ? நளிர்மதி - குளிர்ந்த சந்த்3ரன். (நான்முகக் கடவுளென்கோ) சதுர்முக2னான தை3வமென்பேனோ? (அளிமகிழ்ந்து) க்ருபையை உகந்து. களியென்று - தேன். 8.

ஈ— மாத்ரத்திலன்றிக்கே ப்ரகாரியளவுஞ்செல்ல 1, அநுஸந்தி4க்கையாலே, பரமபுருஷார்த்த2லக்ஷணமோக்ஷம் என்பேனோ? (ஒளி மணிவண்ணனையே) 2 இவ்வஸாதா4ரண விக்3ரஹத்தோபாதியிருக்கிறதாயிற்று கீழ்ச்சொன்னவையுமெல்லாம். 7.

அ—பரமபுருஷார்த்த2மாயிற்று என்றபடி. 4 இவ்விடத்தில், "ஊனம்" என்று-ஸங்கோசத்தைச் சொல்லுகிறது. 5 விபூ4தியைச் சொல்லுகிறவிடத்திலே, "ஒளிமணிவண்ணன்" என்கிறதென்? என்ன (இவ்வஸாதா4ரண என்று தொடங்கி) ஒளிமணிவண்ணனை - வானவராதியென்கோ என்று தொடங்கி அந்வயம். "வானவராதி - போ4க3ஸக்தரான தே3வர்களுக்கு உத்பாத3கன். கீழ் 'வானவர்' என்கிறவிடம் ப்3ரஹ்மாதி3களைச்சொல்லி, இவ்விடத்திலே - ஸூரிகளைச் சொல்லுகிறது என்பாரும் உளர்" என்று உரையிலே. 7.

ஆதே3— ஏழாம் பாட்டு: நித்யஸூரிகளுக்கு ஸத்தாஹேதுவானவனென்பேனோ? அவர்களுக்கு ஆஶ்ரயணீயனென்பேனோ? அவர்களுக்கு உண்ணும்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாமானவனென்பேனோ? அவர்களுக்கு அநுக்தமான எல்லாமென்பேனோ? ஒருநாளுமழியாத ஸம்பத்தென்பேனோ? ஒழிவில்லாத ஸ்வர்க்க3மென்பேனோ? ஆத்மாநுப4வமாத்ரமன்றிக்கே பரமபுருஷார்த்த2லக்ஷணமான மோக்ஷமென்பேனோ? — ஒளியையுடைய நீலமணிபோன்ற வடிவழகையுடையவனை என்கிறார் "வானவராதி" இத்யாதி3யால். 7.

ப— 8. அவ:— அநந்தரம், லோகப்ரதா₄நகாரணேஶ்வர விபூ₄தித்வத்தை அருளிச்செய்கிறார்.

அளி — ரக்ஷணோபகார நிமித்தமான, **மகிழ்ந்து** — உகப்பையுடையனாய்க் கொண்டு, **உலகமெல்லாம்** — ஸமஸ்தலோகங்களையும், **படைத்து** — ஸ்ருஷ்டித்து (உபகாரஸ்ம்ருதியாலே,) **அவை**—அவை, **ஏத்த**—ஸ்தோத்ரம்பண்ண, **நின்ற**— (அத்தாலே க்ருதக்ருத்யனாய்) நிற்பானாய், **களி**—மது₄ஸ்யந்தி₃யாய், **மலர்**—விகஸித புஷ்பமான, **துளவன்** — திருத்துழாய்மாலையழகாலே, **எம்மான்** — என்னை அநந்யார்ஹனாக்கின, **மாயனை**—நவநீத சௌர்யாத்₃யாஶ்சர்ய சேஷ்டிதயுக்தனான, **கண்ணனை**-க்ருஷ்ணனை, (A"ஆயர்கொழுந்தா யவராற்புடையுண்ணும் மாயப்பிரானை யென்மாணிக்கச் சோதியை" என்கிறபடியே அவர்கள் கட்டியடிக்க,) **மணி**— (சாணையிலேறிட்ட) மாணிக்கம்போலே, **ஒளி** — ஒளிபெற்று ஶ்லாக்₄யமான, **வண்ணன்**-வர்ணத்தையுடையவன், (1."ஏக ஏவ ருத்₃ர:"என்கிறபடியே ஸ்வா ஶ்ரிதர்;) **ஒருவனென்று**—ஒருவனென்று, **ஏத்த**—ஸ்துதிக்கும்படி, **நின்ற**—நிற்குமவனாய், **தளிர்**—குளிர்ந்த, **மதி**—சந்த்₃ரகலாத₄ாரணத்தாலும், **சடையன்**—ஜடாத₄ரத்வத்தாலும் போ₄க₃தப:பரனான ருத்₃ரன், **நான்முகன்**—(தே₃வதாவர்க்க₃ம் கையெடுக்கும்படி) சதுர்முக₂னான, **கடவுள்**—தை₃வம், **என்கோ**—என்பேனோ ? 8.

இ— அவ:— எட்டாம் பாட்டில்— ப்ரத₄ாநரான ப்₃ரஹ்மருத்₃ராதி₃களை விபூ₄தியாக வுடையனானபடியை அருளிச்செய்கிறார்.

வ்யா:— **(ஒளிமணி இத்யாதி₃)** கீழில் வடிவழகு பின்னாடினபடி. **(ஒருவன் இத்யாதி₃)** தம:ப்ரசுரராயிருப்பார் "அத்₃விதீயன்" என்று ஏத்தாநின்றால், தான் ஈஶ்வரனாக ப்₄ரமித்து ஆஶ்ரயணீயனாயிருக்கும். **(தளிர்மதிச் சடையன்)** "அது ப்₄ரமம்" என்னுமிடத்தைக் காட்டுகிறது ஸாத₄கவேஷமும் போ₄க₃ப்ராத₄ாந்யமும். தளிர்மதி - குளிர்ந்த சந்த்₃ரன். **(நான்முகக் கடவுள்)** அவனுக்கு ஜநகனான சதுர்முக₂னான தை₃வம். **(அளி மகிழ்ந்து)** க்ருபையையுகந்து. ஸ்ருஷ்ட்யாதி, ரக்ஷணத்தை விரும்பி. **(உலகம் இத்யாதி₃)** லோகத்தையெல்லாம் ஸ்ருஷ்டித்து, அந்த ஸ்ருஷ்டி ப்ரயோஜநம்பெற்று அவர்கள் ஏத்தும்படி நின்ற. **(களிமலர் இத்யாதி₃)** தேனையும் மலரையுமுடைய திருத்துழாயாலே அலங்க்ருதனாய், அத்தாலே என்னை அநந்யார்ஹனாக்கினவன். களி - தேன். **(கண்ணனை மாயனை)** B " எத்திறம் " என்று மோஹிக்கும்படியான ஆஶ்சர்ய சேஷ்டிதங்களையுடைய க்ருஷ்ணனை. 8.

ஈ— அவ:— எட்டாம் பாட்டு. உ ஜக₃த்தில் ப்ரத₄ாநரான ப்₃ரஹ்மருத்₃ராதி₃களை விபூ₄தியாகவுடையனானபடியைப் பேசுகிறார்.

A 1-7-3. B 1-3-1.

ச— வ்யா: - (ஒளி மணிவண்ணனென்கோ) b கீழ்ச்சொன்ன வடிவழகு பின்னுடின படி. c (ஒருவன் இத்யாதி3) d இவன் ஜக3த்துக்கு ப்ரத4ாநனென்று d1 அவிவேகிகள் d2 ஏத்தும்படியாய், குளிர்ந்த மதியையும் சடையையுமுடைய ருத்3ரனென்பேனோ? e (நளிர்மதிச் சடையனென்கோ) e1 தலையான மதியையுடையவன் என்பேனோ? f அவர்கள் ப்4ரமம்போக்கித் f1 தன்பக்கல் ஒன்றுமில்லை. அவனுக்குங்கூட ஜநகனான சதுர்முக2னாகிற g தை3வமென்பேனோ? h (அளிமகிழ்ந்து) ரக்ஷணத்தையே ஆத3ரித்து லோகங்களையடைய ஸ்ருஷ்டித்து அவை ஏத்தநின்ற. i யாதொரு ப்ரயோஜநத்தை நினைத்து ஸ்ருஷ்டித்தான். அந்த ப்ரயோஜநம் பெற்றுநின்ற. (களிமலர் இத்யாதி3) களி யென்று-தேன். மலரென்று-பூ. மது4வையும் மலரையுமுடைத்தான திருத்துழாய் மாலையையுடையனாய், அம்மாலையாலே என்னை அநந்யார்ஹமாக எழுதிக்கொண்டவனுமாய், எனக்கு ஸௌலப4னுமாய், ஆஶ்சர்யமான கு3ணசேஷ்டிதங்களையுடையவனுமானவனை. 8.

அ— எட்டாம் பாட்டு. (ஒளிமணிவண்ணன் இத்யாதி3) a "நளிர்மதிச்சடையன், நான்முகக் கடவுள்" என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை (ஜக3த்தில் இத்யாதி3) b திரியவும் சொல்லுவானென்? என்ன (கீழ்ச்சொன்ன இத்யாதி3) c ஸஜாதீய ப்ரத4ாநர்களைச் சொல்லுகிற ப்ரகரணமாகையாலும், சதுர்முக2னோடே ஸமபி4வ்யாஹரிக்கவேண்டுகையாலும், 1. "ஸஹஸ்ராணி ஸஹஸ்ரஶோ யே ருத்3ரா அதி4பூ4ம்யாம்" என்று - சொல்லப்படுகிற ப்ருத2க்ஜநமான ருத்3ர ஸங்க4த்தை வ்யாவர்த்திக்கிறார் (ஒருவனென்றேத்தநின்ற என்று) அதாவது - 2. "ஏக ஏவ ருத்3ரோ ந த்3விதீயாய தஸ்தே2" என்று ஏத்தப்பட்டவன் என்றபடி. ருத்3ரஶப்3த3வாச்யன் இவனொருவனுமே, மற்றையவர்களெல்லாம் த்ர்யக்ஷத்வசந்த்3ரசூட3த்வாதி3களாலே கௌ3ணப்ரயோக3விஷயபூ4தர் என்றபடி. d ருஜுவாகவோரர்த்த2ம் அருளிச்செய்கிறார் (இவன் ஜக3த்துக்கு இத்யாதி3) d2 "சடையன்" என்ற பத3ஸாமர்த்2யத்தைப்பற்ற (அவிவேகிகளேத்தும்படியாய் என்றது) e1 தலையான மதியென்றதுக்கு - ஶ்லாக்4யமான ஜ்ஞானமென்று சாடு, தலையிலேயான சந்த்3ரனென்று ஸ்வப4ாவம். c,e,f ஒருவனென்றேத்த-ஒருவனென்று ப்4ரமித்தேத்த, நின்ற-அத்தாலே தே3வதைகளாக நின்ற இத்யர்த்த2ஞ்ச, "சடையன்" இத்யுச்யமாநதாபஸவேஷ யோக்3யத்வம் ச ஸ்ருஷ்ட்யர்த்த2ம் சதுர்வேதோ3ச்சாரணோபயோகி3முக2சதுஷ்டயாபி4த4ாந ஸூசிதாக3ந்துகசைதந்யவைஶிஷ்ட்யஞ்ச ஶ்ருதி3 நித4ாயாஹ (அவர்கள் ப்4ரமம் போக்கி இதி) f1 (தன்பக்கலொன்றுமில்லை) e "சடையன்" என்று சொன்ன ஸாத4கவேஷத்தாலேயென்று கேவல ருத்3ரபரமாகவுமாம். g கடவுள்-தே3வதை. h அளி-ரக்ஷணம். மகிழ்ந்து-ஆத3ருத்ய. i ப3லிதம் (யாதொரு ப்ரயோஜநத்தை இத்யாதி3) A "வாழ்த்துவார் பலராக" 3. "விசித்ரா தே3ஹஸம்பத்தி:" இத்யாதி3 த்3ரஷ்டவ்யம். உத்தரார்த்த4பூர்வகம் பூர்வார்த்த4ாநுஸந்த4ாநமந்வய:. 8.

ஜீ— எட்டாம் பாட்டு. (ஒளிமணி இத்யாதி3) a "நளிர்மதிச்சடையன்" இத்யாதி3யைப்பற்ற அவதாரிகை (ஜக3த்தில் இத்யாதி3) b புநஶ்ச சொல்லுவானென்? என்ன (கீழ்ச்சொன்ன இத்யாதி3) d1 2. "ஏக ஏவ ருத்3ரோ ந த்3விதீயாய தஸ்தே2" என்றத்தைப்பற்ற (ஏத்தும்படி என்றது) d2 "சடையன்" என்ற பத3ஸாமர்த்2யத்தைப்பற்ற (அவிவேகிகளேத்தும்படியாய் என்றது) c ஒருவன்-அத்3விதீயன்; ப்ரத4ாநன் என்றபடி. ஒருவனென்று ப்4ரமித்தேத்த அத்தாலே தே3வதையாக நின்ற இத்யர்த்த2:. e1 சாடுவுக்கு, தலையான மதி - ஶ்லாக்4யமான ஜ்ஞாநம். தலையிலேயான சந்த்3ரனென்று ஸ்வப4ாவார்த்த2ம். e,f "சடையன்" என்றதுக்கு ப4ாவம் (அவர்கள் ப்4ரமம் இத்யாதி3) e நளிர்-குளிர்த்தி. g கடவுள்-தே3வதை. h அளி-ரக்ஷணம். i ப3லிதம் (யாதொரு இத்யாதி3) உத்தரார்த்த4ாநுஸந்த4ாந பூர்வகம் பூர்வார்த்த4ாநுஸந்த4ாநமந்வய:. 8.

A 3-1-7.

9. கண்ணனை மாயன் றன்னைக் கடல்கடைந் தமுதங் கொண்ட
அண்ணலை அச்சு தனை அனந்தனை அனந்தன் றன்மேல்
நண்ணிநன் குறைகின் றானை ஞாலமுண் டுமிழ்ந்த மாலை
எண்ணுமா றறிய மாட்டேன் யாவையும் யவரும் தானே.

ஆ— 9. வ்யா:— (கண்ணனை) ஆஶ்ரிதஸௌலபத்வார்த்தமாக தத்ஸஜாதீயதயா அவதீர்ணனாய், ஆஶ்சர்யாதிமநோஹர திவ்யசேஷ்டிதங்களையுடையனாய், ஆஶ்ரிதரைக் கைவிடாத ஸ்வபாவனாய், அநந்தகல்யாணகுண விஶிஷ்டனாய், அநந்தகல்யாணகுண மஹோததியான திருவனந்தாழ்வானை திவ்யஶய்யாஸநாதிகளாகவுடையனாய், ஸர்வலோக பரிபாலகனாய், ஸர்வாந்தராத்மபூதனான எம்பெருமானை இங்ஙனே சொல்லுவேன் என்று அறிகிலேன் என்கிறார். 9.

ஓ— அவ:— ஒன்பதாம் பாட்டில் — அவனுடைய விபூதிவிஸ்தாரங்கள் தனித் தனியே பேசமுடியாது; கார்யகாரண ரூபமான சேதநாசேதநங்களடைய அவனுக்கு விபூதியென்று ப்ரயோஜகத்தாலே சொல்லலாமத்தனை என்கிறார்.

வ்யா:— (கடல்கடைந்து அமுதங்கொண்ட அண்ணலை) க்ஷுத்ரபுருஷார்த்தத்தை இரந்தார்களென்று பாராதே, தானே ஆயாஸித்து அவர்களுடைய ப்ரயோஜநங்களை முடித்துக்கொடுத்த பெரியோனை. (அச்சுதனை) ஆஶ்ரிதர்க்கு ச்யுதியில்லாதபடியிருக்கிறவனை. 9.

ப— அவ:— அநந்தரம், உக்தவிபூதிமாத்ரமன்றியே ஸகலசேதநாசேதனங்களும் தானேயானவனைப் பரிச்சேதிக்கும் ப்ரகாரமறியேன் என்கிறார்.

யாவையும் — எல்லாவகைப்பட்ட அசேதநமும், **யவரும்** — எல்லாவகைப்பட்ட சேதநரும், **தான்** — தானேயாய் வைத்து, **கண்ணனை** — ஆஶ்ரிதஸௌலப்யனாய், **மாயன்றன்னை** — ஆஶ்சர்யாவஹமான குணசேஷ்டித நிரூபணீயனாய், (அர்வாசீந ப்ரயோஜநார்த்திகளுக்கும்) **கடல்** — கடலை, **கடைந்து** — கடைந்தும், **அமுதங் கொண்ட** — கார்யஞ்செய்யும், **அண்ணலை** — ஸர்வஸ்வாமியாய், **அச்சுதனை** — ஆஶ்ரிதரை நழுவவிடாதவனாய், **அனந்தனை** — அபரிச்சிந்நஸ்வரூபாதி வைபவத்தை

ஆதே.— எட்டாம் பாட்டு. ஒளிமணிவண்ணனென்பேனோ? இவன் ஜகத்துக்கு ப்ரதாநனென்று அவிவேகிகள் ஏத்தும்படியாய் குளிர்ந்த மதியையும் ஜடையையுமுடைய ருத்ரனென்பேனோ? அவனுக்குங்கூட ஜநகனான சதுர்முகனாகிற தேவனென்பேனோ?—ரக்ஷணத்தையே ஆதரித்து லோகங்களையடைய ஸ்ருஷ்டித்து அவை ஏத்த க்ருதார்த்தனாய் நின்ற, மதுவையும் மலரையுமுடைத்தான திருத்துழாய் மாலையையுடையனாய், அம்மாலையாலே என்னை அநந்யார்ஹமாக எழுதிக்கொண்டவனுமாய், எனக்கு ஸௌலபனுமாய், ஆஶ்சர்யகுணசேஷ்டிதங்களையுடையவனுமானவனை என்கிறார் "ஒளிமணிவண்ணன்" இத்யாதியால். 8.

ப—யுடையனாய், **அனந்தன்றன்மேல்**—(அத்தனையும் தனக்குள்ளே அடங்கும்படியான) திருவனந்தாழ்வான் மேலே, **நண்ணி**—பொருந்தி, **நன்கு**—உகந்து, **உறைகின்றானை** — கண்வளராநிற்குமவனாய், **ஞாலம்** — ரக்ஷ்யத்துக்கு ஆபத்துவந்தால், **உண்டு**—வயிற்றிலே வைத்துநோக்குவது, **உமிழ்ந்த**—வெளிநாடு காட்டுவதான, **மாலை**—வாத்ஸல்யத்தையுடையவனானவனை, **எண்ணுமாறு**—(பரிச்சே₂தி₃த்து) நினைக்கும்படி, **அறியமாட்டேன்**—அறிகிறிலேன். 9.

இ— அவ:— ஒன்பதாம் பாட்டில் — 1. **"नास्यन्तो विस्तरस्य मे" (நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே)** என்று அவன்படிகள் என்னால் பேசமுடியாது; கார்யகாரணரூப₁யாவஸ்த₂மான ஸகல சேதநாசேதநங்களும் அவனுக்கு விபூ₄தியென்று ப்ரயோஜகத்தில் சொல்லலாமித்தனை என்கிறார்.

வ்யா:— **(கண்ணனை இத்யாதி₃)** ஸௌலப்₄யமும் ஆஶ்சர்யகு₃ணசேஷ்டிதங்களும் பின்னாடுகிறபடி. **(கடல் இத்யாதி₃)** "க்ஷுத்₃ர ப்ரயோஜநத்தை அபேக்ஷித்தார்கள்" என்னாதே, உடம்பு நோவக் கடல் கடைந்து அவர்கள் ப்ரயோஜநத்தைக் கொடுக்கும் ஸ்வாமியை. **(அச்சுதனை)** அநந்யப்ரயோஜநராய்க் கிட்டினாரை து₃:க்க₂ஸாக₃ரத்தில் நழுவவிடாதவனை. **(அனந்தனை)** ஸ்வரூப ரூப கு₃ணங்களுக்கு எல்லையில்லாதவனை. **(அனந்தன் இத்யாதி₃)** அபரிச்சி₂ந்நனான தன்னையும் விளாக்குலை கொள்ளவல்ல அவன் மேலே கிட்டி நாய்ச்சிமாராலும் எழுப்பவொண்ணாதபடி கண்வளர்ந்தருளுகிறவனை. **(ஞாலம் இத்யாதி₃)** ஆபத்துக் கண்டால் படுக்கையிற்பொருந்தாதே ரக்ஷிக்கும் ஸர்வேஶ்வரனை. **(எண்ணுமாறு அறியமாட்டேன்)** இவன் படிகளுக்கு என்னால் பாசுரமிட்டுச் சொல்லப்போகாது. **(யாவையும் யவரும் தானே)** சேதநாசேதநங்களையுடையன் என்று ப்ரயோஜகத்தைச் சொல்லலாமித்தனை என்கிறார். 9.

ஈ— **அவ:—ஒன்பதாம் பாட்டு. a அவனுடைய விபூ₄தி விஸ்தாரங்கள் தனித்தனியே பேசமுடியாது. கார்யகாரணரூபமான சேதநாசேதநங்கள் அவனுக்கு விபூ₄தியென்று a₂ ப்ரயோஜகத்திலே சொல்லலாமித்தனை என்கிறார்.**

வ்யா:— (கண்ணனை மாயன்றன்னை) bA**"எத்திறம்" என்னவேண்டும்படியான** **b₂/கு₃ணசேஷ்டிதங்களையுடையவனை.** (கடல் இத்யாதி₃) c **ப்ரயோஜநாந்தரபரரான**

அ— ஒன்பதாம் பாட்டு. (கண்ணனை இத்யாதி₃) a"எண்ணுமாறு அறியமாட்டேன் யாவையும் யவரும் தானே" என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை (அவனுடைய இத்யாதி₃) a₂(ப்ரயோஜகத்திலே இதி) 2. "ப்ரயோஜகஶ்சோபாதி₄ரித்யுச்யதே" இதி ந்யாயாத் சேதநத்வாசேதநத்வ

ஜீ— ஒன்பதாம் பாட்டு. (கண்ணனை இத்யாதி₃) a"எண்ணுமாறு அறியமாட்டேன் யாவையும் யவரும் தானே" என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை (அவனுடைய இத்யாதி₃) a₂(ப்ரயோஜகத்திலே) சேதநத்வாசேதநத்வரூபோபாதி₄க்ரோட₃காரேண இத்யர்த்த₂:. b பத₃ச்சேர்த்திக்கு

A 1-3-1. / "கு₃ணசேஷ்டிதங்களையுடைய" என்று அரும்பதவுரைகளுக்குப் பாட₂ம்.

ஈ-ஸுர்களுக்கும், உடம்பு நோவக் கடல் கடைந்து அவர்கள் அபேக்ஷித c2 ஸம்வித4ாநம் பண்ணும் ஸ்வாமியை. d (அச்சுதனை) e தன்னை ஆஶ்ரயித்தாரை ஒருநாளும் e2 நழுவ விடாதே ரக்ஷிக்கும் ஸ்வப4ாவனானவனை. f (அநந்தனை) g ஸ்வரூபரூபகு3ண விபூ4தி களால் அபரிச்சி2ந்நனானவனை. (அனந்தன் இத்யாதி3) h ஶேஷத்வகாஷ்டை2யிலே நிற்கையாலே ஶேஷியானவனையும் h2 விளாக்குலை கொள்ளவல்லனான திருவநந் தாழ்வான் மேலே கிட்டி, h3 பிராட்டிமார் திருமுலைத்தடத்தாலும் நெருக்கி எழுப்ப வொண்ணாதபடி கண்வளர்ந்தருளுகிறவனை. (ஞாலமுண்டு உமிழ்ந்த மாலை) i ஆபந்நருண்டானால் அப்படுக்கையிலும் பொருந்ாதவனை. (எண்ணுமாறறிய மாட்டேன்) j அவனும் விபூ4தி விஷயமாகப் பரக்கச் சொல்லிக்கொண்டுபோரா, 1. "नास्त्यन्तो विस्तरस्य मे" (நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே) என்றானிறே, அப்படியே

அ—ரூபோபாதி4க்ரோடீ3காரேண இத்யர்த்த2:. b பத3த்3வயஸங்க3திம் ஶ்ருதி3 நித4ர்யாஹ (எத்திறம் என்னவேண்டும்படியான இதி) எத்திறம் என்னவேண்டும்படி - ஆஶ்சர்யமான கு3ண சேஷ்டிதங்களையுடைய - க்ருஷ்ணனை என்று கூட்டி நிர்வஹிப்பது. c தாத்பர்ய க3ர்ப்பி4த ஶப்3த3ார்த்த2ம் (ப்ரயோஜநாந்தர இத்யாதி3) c2 ஸம்வித4ாநம் - நிறைவேற்றிக்கொடுக்கை. d,e (தன்னை இத்யாதி3) "ந ச்யாவயதீதி-அச்யுத:" என்று கருத்து. f,g த்ரிவித4பரிச்சே2த3ராஹித்யம் அநந்தஶப்3தா3ர்த்த2 இத்யபி4ப்ராயேணாஹ (ஸ்வரூபரூபேதி) h இரண்டுபேரும் அநந்தனானால் ஈஶ்வரத்3வித்வம் வாராதோ? என்ன (ஶேஷத்வகாஷ்டை2யிலே இத்யாதி3) f,h "அனந்தன்" என்று ஶேஷத்வத்தில் உத்தராவதி4யில்லாதவன் என்றபடி. h2 விளாக்குலை கொள்ளுகையாவது - வ்யாமுக்3த4னுக்குகை. 2. "ஸிவா ஸமய்யா ஸா" இத்யாதி3. h3 "நன்குறைகின்றானை" என்ற பத3த்துக்கு வாஸநை (பிராட்டிமார் இத்யாதி3) i "நன்குறைகின்றானை, ஞாலமுண்டுமிழ்ந்தமாலை"

ஜீ. அர்த்த2ம் (எத்திறம் இத்யாதி3) b2 (கு3ணசேஷ்டிதங்களையுடைய) க்ருஷ்ணனை என்று கூட்டுவது c ப4ாவக3ர்ப்பி4த ஶப்3த3ார்த்த2ம் (ப்ரயோஜநாந்தர இத்யாதி3) c2 ஸம்வித4ாநம்-நிறைவேற்றிக் கொடுக்கை. d,e2 (நழுவவிடாதே இதி) "ந ச்யாவயதீதி-அச்யுத:" என்று கருத்து. f,g அநந்தனை-அபரிச்சி2ந்நனை, f,h "அநந்தன்" என்று-ஶேஷத்வத்தில் உத்தராவதி4யில்லாதவன் என்றபடி h2 விளாக்குலைகொள்ளுகை - கப3ளீகரிக்கை. அதாவது - வ்யாமுக்3த4னுக்குகை. h3 "நன்கு" i "நன்குறைகின்றானை, ஞாலமுண்டு என்ற பத3த்துக்கு வாஸநை (பிராட்டிமார் இத்யாதி3)

ப்ர— (ஒன்பதாம் பாட்டு) (கண்ணனை இத்யாதி3) (அநந்தன் தன்மேல் j श्रीमति वैष्णवे पुराणे द्वितीयांशे पञ्चमेऽध्याये पातालवर्णनप्रकरणे "पातालानामधश्चास्ते विष्णोय तामसी तनुः। शेषाख्या यद्गुणान्वक्तुं न शक्ता दैत्यदानवाः॥१३॥ योऽनन्तः पठ्यं सिद्धैर्देवो देवर्षिपूजितः। सहस्रशिरसा व्यक्तः स्वस्तिकामलभूषणः॥१४॥ गन्धर्वाप्सरसस्सिद्धा किन्नरोरगचारणाः। नान्तं गुणानां गच्छन्ति तेनानन्तोऽयमुच्यते॥२४॥" तामसी-संहारहेतु भूततमोधिष्ठात्री; स्वस्तिकम्-फणास्थरेखाचिह्नविशेषः॥

1. (எண்ணுமாறு அறியமாட்டேன்) श्रीभगवद्गीतासु दशमे—"हन्त ते कथयिष्यामि विभूतीरात्मनश्शुभाः॥ प्राधान्यतः कुरुश्रेष्ठ! नास्त्यन्तो विस्तरस्य मे॥१९॥"

10. யாவையும் யவருந் தானா யவரவர் சமயந் தோறுந்
தோய்விலன் புலனைந் துக்குஞ் சொலப்படா னுணர்வின் மூர்த்தி
ஆவிசே ருயிரி னுள்ளா லாதுமோர் பற்றி லாத
பாவனை யதனைக் கூடி லவனையுங் கூட லாமே.

ஆ— 10. வ்யா:— (யாவையும்) இப்படி ஸர்வவஸ்துக்களோடும் ஆத்மதயா ஸம்பந்த₄முண்டாயிருக்கச்செய்தே, ஹேயப்ரத்யநீகதயா ஸ்வேதரஸமஸ்தவஸ்துவிலக்ஷணனாய் ஜ்ஞாநஸ்வரூபனாயிருக்கையாலே ஸ்வஶரீரபூ₄தஸமஸ்தவஸ்துக₃தஸர்வதோ₃ஷை: அஸம்ஸ்ப்ருஷ்டனாயிருக்கும். இதுகூடுமோ? என்னில்; இந்த ஶரீரத்திலே வர்த்திக்கிற இந்த

ஈ—இவரும் கீழே சிலவற்றைச் j₁ சொல்லா, இவனைச் j₂ சொல்லும் ப்ரகாரம் அறி கிறிலேன் என்கிறார். ஆனாலும் k ப்ரயோஜகத்தில் சொன்னாலோ? என்னில்: (யாவையும் யவரும் தானே) சேதநாசேதநங்களுடைய ப்ரகாரமாகத் தான் ப்ரகாரியாயிருக்குமித்தனை. 9.

அ—என்கிற சேர்த்தியாலே அருளிச்செய்கிறார் (ஆபந்நருண்டானால் என்று தொடங்கி) j"மயர்வற மதிநலம் அருளினன்" இதி ப₄க₃வத்ப்ரஸாத₃லப்₃த₄ஜ்ஞாநவைப₄வோக்தம். "என்னானாலு அறியமாட்டேன்" இதி கத₂ம் வத₃தீத்யாஶங்காம் பரிஹரந்நாஹ (அவனும் விபூ₄திவிஷயமாக இதி) இவ்விடத்திலே-1. "அத₂வா ப₃ஹுநைதேந கிம் ஜ்ஞாதேந தவார்ஜுந। விஷ்டப்₄யாஹமித₃ம் க்ருத்ஸ்நமேகாம்ஶேந ஸ்தி₂தோ ஜக₃த் ॥" என்னும் ஶ்லோகத்தையும் அருளிச்செய்வர். j₂ கார்யே காரணோபசார இத்யபி₄ப்ராயேணாஹ (சொல்லும் ப்ரகாரம் இதி) k ப்ரயோஜகத்தில் - ஸங்க்ஷேபத்திலே என்றபடி. 9.

ஜீ—உமிழ்ந்த மாலை" என்கிற சேர்த்திக்கு பா₄வம் (ஆபந்நர் இத்யாதி₃) j"அறியமாட்டேன்" என்கிறதென்; முடியச்சொல்லப்போகாதோ? என்ன (அவனும் இத்யாதி₃) 1. "அத₂வா ப₃ஹுநைதேந கிம் ஜ்ஞாதேந தவார்ஜுந। விஷ்டப்₄யாஹமித₃ம் க்ருத்ஸ்நமேகாம்ஶேந ஸ்தி₂தோ ஜக₃த் ॥" என்ற கீ₃தாவசநம் அநுஸந்தே₄யம். j₁ சொல்லா-சொல்லி. j₂ கார்யே காரணோபசார இத்யபி₄ப்ராயேணாஹ (சொல்லும் ப்ரகாரம் இதி) k ப்ரயோஜகம்-ஸங்க்ஷேபம். 2. "ஹந்த தே கத₂யிஷ்யாமி விபூ₄தீராத்மநஶ்ஶுபா₄:। ப்ராதா₄ந்யத: குருஶ்ரேஷ்ட₂! நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே॥" இதி கீ₃தாஸூக்தம் த₃ஶமே. 9.

ஆதே₃— ஒன்பதாம் பாட்டு. க்ருஷ்ணனாய் ஸுலப₄னானவனை, ப்ரயோஜநாந்தரபரர்க்கும் உடம்புநோவக் கடலைக்கடைந்து அம்ருதத்தைக் கொடுத்த ஸ்வாமியை; ஆஶ்ரிதரை ஒருநாளும் நழுவவிடாதவனை, ஸ்வரூப ரூப கு₃ண விபூ₄திகளால் அபரிச்சி₂ந்நனானவனை, திருவநந்தாழ்வான்மேலே கிட்டிப் பிராட்டிமார்களும் எழுப்பவொண்ணாதபடி கண்வளர்ந்தருளுகிறவனை, ஜக₃த்தையெல்லாம் உண்டுமிழ்ந்த வ்யாமுக்₃த₄னைச் சொல்லும் ப்ரகாரமறிகிறிலேன்; ப்ரயோஜகத்திலே சொல்லில், சேதநாசேதநங்களுடைய ப்ரகாரமாகத் தான் ப்ரகாரியாயிருக்குமத்தனை என்கிறார் "கண்ணனை" இத்யாதி₃யால். 9.

ஆ—ப்ரத்யகா₃த்மாவுக்கு இந்த ஶரீரக₃ததே₃ரஷங்களினல் அஸம்ஸ்ப்ருஷ்டனுயிருக்கையாகிற இஸ்ஸ்வபா₄வங்கூடுமாகில் எம்பெருமானுக்கு இது கூடும் என்கிருர். 10.

ஒ— அவ:—பத்தாம் பாட்டில்—சேதநாசேதநங்களுக்கு அந்தராத்மதயா வ்யாபித்து நின்ருல் தத்₃க₃ததோ₃ஷை: அஸம்ஸ்ப்ருஷ்டனுயிருக்கும் என்கிருர்.

வ்யா:— (யாவையும் என்று தொடங்கி) சேதநாசேதநங்களுக்கு அந்தராத்மாவாய் வைத்து அவற்றினுடைய து₃:க்கி₂த்வபரிணுமித்வாதி₃வ்யவஸ்தை₂களொன்றிலும் தோய்விலன்; அவரவரென்று-இரண்டுக்கும் உபலக்ஷணம். (புலனைந்துக்கும் சொலப்படான்) சக்ஷுராதி₃கரணங்களுக்கு விஷயமாகச் சொல்லப்படான். (உணர்வின் மூர்த்தி) ஜ்ஞாநஸ்வரூபன். (ஆவியென்று தொடங்கி) அநாதி₃காலம் கார்யகாரணேப₄யரூபமான ப்ரக்ருதியோடே கலசியிருக்கிற ப்ரத்யகா₃த்மாவுக்கு, ப்ரக்ருதியினுடைய பரிணுமித்வாதி₃கள் தட்டாதேயிருக்கிறப்போலே எம்பெருமானுக்கும் இரண்டோடு கலசியிருந்துவைத்தே அவற்றினுடைய ஸ்வபா₄வம் தட்டாதேயிருக்கக்கூடும். 10.

ப— 10. அவ:— அநந்தரம், இப்படி ப்ரகாரபூ₄தசித₃சித்துக்களின் படி அவன் தனக்குத் தட்டாதபடியை அநுஸந்தி₄க்கிருர்.

யாவையும்—எல்லா அசேதநமும், யவரும்—எல்லாச் சேதநரும், தானுய்—தானேயாய், அவரவர்—அந்தந்தச் சேதநருடைய, சமயந்தோறும்—(அசித்ஸம்ஸர்க்க₃நிப₃ந்த₄நமான) தே₃வாதி₃வ்யவஸ்தை₂களில், தோய்விலன்—அவர்களைப்போல் தனக்கு ஸங்க₃மில்லாதவனுய், புலனைந்துக்கும்—இந்த்₃ரியபஞ்சகத்துக்கும், சொலப்படான்—(விஷயமாகச்) சொல்லப்படாதவனுய், உணர்வின் மூர்த்தி—ஸ்வயம்ப்ரகாஶஜ்ஞாநஸ்வரூபனுயிருக்கும்; (ஆதலால்,) ஆவி—ப்ராணுஶ்ரயமான ஶரீரத்தோடு, சேர்—சேர்ந்த, உயிரின்—ஆத்மாவினுடைய, உள்—ஸ்வரூபத்தில், ஆதும்—(ஶரீரக₃தமான) ஜட₃த்வபரிணுமித்வாதி₃ ஸ்வபா₄வங்கள், ஓர்—ஒன்றிலும், பற்று—தொற்று, இலாத—இல்லாத, பாவனை—ப்ரதிபத்தியானது, அதனை—அந்த ஸ்வரூபத்தை, கூடில்—கிட்டுமாகில், ஆதுமோர் பற்றிலாத—(ஸமஸ்தசேதநாசேதநஸ்வபா₄வங்களிலும்) ஒரு தொற்றில்லை என்கிற ப்ரதிபத்தி, அவனையும்—(கீழ்ச்சொன்ன ஸ்வயம்ப்ரகாஶஜ்ஞாநஸ்வரூபனை) ஈஶ்வரனையும், கூடலாம்—சேரலாம், ஏ—விஶ்சிதம். 10.

இ— அவ:— பத்தாம் பாட்டில் — சேதநாசேதநங்களுக்கு அந்தராத்மாவாய் நின்ருல் தத்₃க₃ததோ₃ஷரஸம்ஸ்ப்ருஷ்டனுயிருக்கும் என்கிருர்.

வ்யா:—(யாவையும் இத்யாதி₃) ஸகலசேதநாசேதநங்களுக்கு அந்தராத்மாவாய், அவற்றினுடைய து₃:க்கி₂த்வபரிணுமித்வங்கள் தட்டாதபடியாயிருக்கிறவன்.

இ— அவரவரென்று-இரண்டுக்கும் உபலக்ஷணம். சமயம்-வ்யவஸ்தை2. அசித்துக்குப் பரிணாமித்வமும், தத்ஸம்ஸ்ருஷ்ட சேதநனுக்கு து3:க்கி2த்வாதி3களும் வ்யவஸ்தி2தம் என்கை. **(புலன் இத்யாதி3)** சக்ஷுராதி3கரணங்களுக்கு விஷயமாகச் சொல்லப் படான். அவற்றால் அறியப்படான் என்கை. **(உணர்வின் மூர்த்தி)** ஜ்ஞாந ஸ்வரூபன். **(ஆவி இத்யாதி3)** ஆவியென்று-ஶரீரம். அத்தோடு சேர்ந்த ஆத்மாவில் ஶரீரத்திலுண்டான பரிணாமித்வாதி3 தோ3ஷங்கள் தட்டாதென்கிற விவேகாநுஸந்தா4நம் ஆத்மாவின்பக்கலிலே கூடுமாகில். **(உள்ளால்)** உள் ஆல்; ஆல் அசை; உள்-உள்ளே. **(ஆதுமோர் பற்றிலாத)** ஏதேனும் ஒரு தொற்றில்லாத. **(அதனை)** ஆத்மாவை; ஆத்மாவின்பக்கலிலே என்றபடி. **(அவனையும் கூடலாம்)** அசித்3க3த பரிணாமாதி3களும சேதநக3தமான து3:க்கி2த்வாதி3களும் தட்டாதென்கிற இதுவும் ஸர்வேஶ்வரன்பக்கலிலே கூடலாம். "இப்பாட்டில்-ப4க்தியுடையார்க்கு அவனைக் கிட்டலாவது என்கிறார்" என்பாருமுண்டு. "இதரவிஷய ஸங்க3மற்றார்க்கு அவனைக் கிட்டலாவது என்கிறார்" என்பாருமுண்டு. "அந்திமஸ்ம்ருதியுடையார்க்குக் கிட்டலாம்" என்பாருமுண்டு. "ஸர்வாத்மபா4வம் சொல்லிநிற்கையாலே, அவற்றின் பக்கல் தோ3ஷம் தட்டாதாவொருவனென்னுமிடம் சொல்ல வேணும்; அத்தைச் சொல்லுகிறது" என்பர் எம்பெருமானார். 10.

ஈ— அவ:— பத்தாம் பாட்டு. a சேதநாசேதநங்களுக்கு அந்தராத்மதயா வ்யாபித்து a1 நின்றால் தத்3க3ததோ3ஷைரஸம்ஸ்பருஷ்டன் என்கிறார்.

வ்யா:— (யாவையும் யவருந்தானாய்) **சேதநாசேதநங்களடைய b "தான்" என்கிற சொல்லுக்குள்ளே அடங்கும்படி ப்ரகாரமாகத் தான் ப்ரகாரியாய்.** (அவரவர் இத்யாதி3) **c அவரவர் என்கிறது-சேதநருடைய பன்மையைப்பற்ற. d கீழே "யாவையும் யவரும்" என்று ஒக்க எடுக்கையாலே, அநுபா4ஷிக்கிற இடத்திலும், அவையவை**

அ— பத்தாம் பாட்டு. (யாவையும் இத்யாதி3) a "யாவையும் யவரும்" என்று தொடங்கி, "தோய்விலன்" என்ற பத3த்தைக் கடாக்ஷித்து அவதாரிகை (சேதநாசேதநங்களுக்கு இத்யாதி3) a1 நின்றால்-நின்றாலும்; b தான் என்கிற சொல்லுக்குள்ளே அடங்குகையாவது - ஸர்வேஶ்வரனுடைய அஹம்ஶப்3த3த்தோடே ஸமாநாதி4கரிக்க யோக்3யமாயிருக்கை. அஹம்ஶப்3த3 விஶேஷ்யமே பதா3ந்தரவிஶேஷ்யமானால் இதுக்குள்ளே அடங்கினதாயிருக்குமிறே; c "அவரவர்" என்கிற விப்லைக்குத் தாத்பர்யம் (அவரவர் இத்யாதி3) d "யாவையும் யவரும்" இதி சேதநாசேதநே஽பி4தா4ய, அநுவாத3ஸ்த2லே஽பி "அவையவை அவரவர்" இத்யநநூத்3ய, சேதநமாத்ராநுவாத3: கத2ம்? இத்யத்ராஹ (கீழே யாவையும் யவரும் இதி) e அத2ாப்யாக்ஷேபத: ப்ராப்தாத்

ஜீ— பத்தாம் பாட்டு. (யாவையும் இத்யாதி3) a "தோய்விலன்" என்னுமளவும் கடாக்ஷித்து அவதாரிகை (சேதநாசேதநங்களுக்கு இத்யாதி3) a1 நின்றால்-நின்றாலும். b தானென்கிற சொல்லுக் குள்ளே அடங்குகை - ஸர்வேஶ்வரனுடைய அஹம்ஶப்3த3த்தோடே ஸமாநாதி4கரிக்க யோக்3யமாயிருக்கை. c விப்லைக்கு ப4ாவம் (அவரவர் இத்யாதி3) d "யாவையும் யவரும்" என்றத்தை அநுபா4ஷிக்கிறாராகில், "அவரவர்" என்றவோபாதி, அவையவை என்றும் அநுபா4ஷியாதொழிவானென்? என்ன (கீழே யாவையும் இத்யாதி3) e இத்தை ஶங்காபூர்வகமாக விவரிக்கிறார்

ஈ—யென்று-அசித்தும் தன்னடையே வரும். e அவைதன்னை எடாதொழிவானென்? என்னில்.f அப்ராத4ாந்யத்தாலும் g ப்ரகரணப3லத்தாலும் தன்னடையே வரும் h என்னுமிடங்கொண்டும். சமயமென்கிறது-வ்யவஸ்தை2களை. i அசித்தினுடைய பரிணாமாதி3களையும் சேதநத்தினுடைய ஸுகி2த்வ து3:க்கி2த்வங்களையும் நினைக்கிறது. j (தோய்விலன்) k சேதநாசேதநங்கள் "தான்" என்கிற சொல்லுக்குள்ளே அடங்கும்படி அவற்றோடே கலந்துநிற்கச்செய்தே, அவற்றினுடைய தோ3ஷங்கள் தன்பக்கல் தட்டாதபடிநிற்கும். l சேதநர்க்கு அசித்3க3தமான பரிணாமாதி3களில்லையேயாகிலும், அந்த அசித்ஸம்ஸர்க்க3த்தாலே ஸுகி2த்வ து3:க்கி2த்வங்கள் உண்டாகாநின்றதே; அப்படியே இச்சேதநாசேதநங்கள் எங்கும் புக்கு வ்யாபித்துநின்றால், தத்3க3ததோ3ஷம்

அ—ஆபி4த4ாதிகஸ்யைவ த்யாஜ்யத்வாத் கிமர்த்த2ம் நோபாத்தமித்யபி4ப்ராயேண ஶங்கதே (அவை தன்னை இதி) f ஆக்ஷேபஸ்ய3ஹா2த்வாத3ாபி4 த4ாநிகவத் பரிஸ்பு2ரதீத்யபி4ப்ராயேண அநுபாத்தம் இத்யபி4ப்ராயேணாஹ (அப்ராத4ாந்யத்தாலும் இதி) g (ப்ரகரணப3லத்தாலும்) கீழே ஒக்க எடுத்து அநுப4ாஷிக்கிற ப்ரகரணப3லத்தாலும் என்றபடி. h (என்னுமிடங்கொண்டும்) என்ற ஸப்3த3த்துக்கு அர்த்த2மில்லை. i வ்யவஸ்தை2கள்தான் ஏதென்ன? (அசித்தினுடைய இத்யாதி3) j "தோய்வு" என்று - ஸ்பர்ஶமாய், "இல்" என்று - இல்லாமையாய், சேதநா சேதநக3தமான தோ3ஷஸ்பர்ஶமில்லாதவன் என்றபடி. k (சேதநாசேதநங்கள் இதி) பா3ல்யயௌவநாத்3யவஸ்தா2 யதா2 ஜீவாத்மாநம் ந ஸ்ப்ருஶந்தி தத்3வதி3தி பா4வ:. ப்ரஸக்தஸ்ய ஹி ப்ரதிஷேத4:. தத்3க3ததோ3ஷப்ரஸக்தியுண்டாயே பரிஹரிக்கவேணுமே என்னில்; ருமாக3த காஷ்ட2வத் பாதகிஸம்ஸர்க்க3ாத் பாதகித்வவத் வர ப்ரஸக்தியும் உண்டே என்றபடி. அசித்3க3த தோ3ஷஸங்க்ரமணத்துக்கு "ருமாக3தகாஷ்ட2வத்" என்கிறது த்3ருஷ்டாந்தம்; சேதநதோ3ஷம் தத்ஸம்ஸர்க்க3ாத் வரும் என்றதுக்கு த்3ருஷ்டாந்தம் "பாதகிஸம்ஸர்க்க3ாத் பாதகித்வவத்" என்றது. l தத்ர ஶங்கதே (சேதநர்க்கு இதி) "அவரவர் சமயந்தோறும் தோய்விலன்" என்று - தத்ஸம்ஸ்ருஷ்டனாயிருக்கச்செய்தேயும் அவற்றினுடைய தோ3ஷம் தன்பக்கல் தட்டாதபடி நிற்குமென்று சொல்லி, இங்கு த்3ருஷ்டாந்தமும் - "ஆவிசேர்" இத்யாதி3யாலே மூலகாரர் அருளிச்செய்திருக்கச்செய்தேயும், (சேதநர்க்கு அசித்3க3தமான) இத்யாதி3 வாக்யத்தாலே ஶங்கித்துப் பரிஹரிக்கிற வ்யாக்3யாதாவுக்குக் கருத்து என்னென்னில்; சேதநாசேதந ஸம்ஸர்க்க3க்ருதமான தத்தத்3தோ3ஷங்கள் இவனைக் கிட்டாது என்னுமத்தை த்3ருஷ்டாந்த மூகே2ந ஸாதி4க்கிறவிடத்தில் - ஶரீரக3தமான பா3ல்யயௌவநாதி3 தோ3ஷங்கள் ஈஶ்வரனுக்கு, ருமாக3தகாஷ்ட2வத் - உப்பளத்திலே விழுந்த மரம்போலே வாராதோவென்னில்; வேணுமாகில், தத்3தோ3ஷங்கள் வாராதென்று "ஆவிசேர்" இத்யாதி3 த்3ருஷ்டாந்தப3லங்கொண்டு ஸாதி4க்கிறார். இனி அந்த ஶரீரக3தமான பா3ல்யயௌவநாதி3கள் ஆத்மாவுக்கு இல்லையேயாகிலும் அசித்ஸம்ஸர்க்க3க்ருதமான ஸுகி2த்வது3:க்கி2த்வங்களுண்டாகிறவோபாதி ஈஶ்வரனுக்கும் தோ3ஷம் வாராதோ என்கிற ஶங்கையும் பரிஹரணீயமொன்றாகையாலே அது மூலகாரர்க்கு விவக்ஷிதமென்னுமிடந்தோற்ற அருளிச்செய்கிறார் என்று கருத்து. m அபஹத பாப்மத்வாதி3கு3ணயோகி3தயா நித்யஶுத்3த4த்வாந்ந ஸ்ப்ருஶதீதி பரிஹரதி (அவற்றால்

ஜீ—(அவை தன்னை இத்யாதி3) h(என்னுமிடங்கொண்டும்) என்ற ஶப்3த3த்துக்கு அர்த்த2மில்லை. i வ்யவஸ்தை2கள்தானேதென்ன (அசித்தினுடைய இத்யாதி3) j "தோய்வு" என்று-ஸ்பர்ஶமாய், "இல்" என்று-இல்லாமையாய், சேதநாசேதநக3தமான தோ3ஷஸ்பர்ஶமில்லாதவன் என்றபடி. k (சேதநாசேதநங்கள் இதி) பா3ல்யயௌவநாத்3யவஸ்தா2 யதா2 ஜீவாத்மாநம் ந ஸ்ப்ருஶந்தி, தத்3வத் இதி பா4வ:. l தத்ர ஶங்கதே (சேதநர்க்கு இத்யாதி3) n1. "ஸம்போ4க3 ப்ராப்திரிதி

ஈ-இவனை ஸ்பர்ஶியாதோ? என்றால்; ஶஅவற்றால் அஸம்ஸ்ப்ருஷ்டனாயிருக்கும்.ஶஎல்லாம் செய்தாலும் இவற்றுக்கு ஸுகி2த்வது3:க்கி2த்வங்களின்றியிலேயிருக்க, இவ்வசித் தோட்டைச் சேர்த்தியாலேயன்றோ உண்டாகிறது. o அப்படி இவனுக்கும் கூடாதோ? என்னில்; p கூடாது. அதுக்கடி-q ப்ரவேஶஹேது விஶேஷத்தாலே. r இவனைப்போலே கர்மமடியாகவன்றிக்கே அநுக்3ரஹமடியாகவிறே அவனுக்கு இவற்றோட்டை ப்ரவேஶமிருப்பது. s சிறைக்கூடத்திலே சிறையனும் கிடந்தான், ராஜகுமாரனுமிருந்தான்; சிறையன் கர்மமடியாக ப்ரவேசிக்கையாலே து3:க்க2ஹேதுவாயிற்று, ராஜகுமாரன் இச்சை2யாலே ப்ரவேசிக்கையாலே போ4க3ரூபமாயிருந்தது; t1.''ஸமானே வ்ருக்ஷே பரிஷஸ்வஜாதே-அனஶ்னந்ந்ய:''

அ—அஸம்ஸ்ப்ருஷ்டனாயிருக்கும் இதி) ஶஜீவஸ்யாபி ப்ரஜாபதி வாக்யே-அபஹதபாப்மத்வாதி3ப்ரதிபாத3நாத் 2. ''ஸம்பத்3யாவிர்பா4வஸ் ஸ்வேந ஶப்3தா3த்'' 3. ''பரம் ஜ்யோதிருபஸம்பத்3ய ஸ்வேந ரூபேணாபி4நிஷ்பத்3யதே'' இத்யாதி3ப்4யஶ்ச ஜீவஸ்யாப்யபஹதபாப்மத்வாதே3ள ப்ரஸித்3தே4 ஸத்யபி ஹி ஸுகி2த்வ து3:க்கி2த்வாத3யோ ப4வந்தி; தத்3வத் பரமாத்மந: கிம் ந ஸ்யாதி3த்யபி4ப்ராயேண ஶங்கதே (எல்லாம் செய்தாலும் இதி) யத்3வா, இந்த ஶங்காபரிஹாரம் ஸூத்ரகாரராலும் 4. ''ஸம்போ4க3ப்ராப்திரிதி சேந்ந வைஶேஷ்யாத்'' என்கிற ஸூத்ரத்திலே விஶத3மாக ப்ரதிபாதி3க்கப்பட்டதே, அந்த ஸூத்ரார்த்த2த்தை ஹ்ருதீ3கரித்துக்கொண்டு அருளிச்செய்கிறார் (எல்லாம் செய்தாலும் இத்யாதி3) o (அப்படி இவனுக்கும் கூடாதோ என்னில்) என்கிறவிது 4. ''ஸம்போ4க3ப்ராப்திரிதி சேத்'' என்றதுக்கு அர்த்த2ம். சேதநாசேதநங்களோட்டை ஸம்ஸர்க்க3த்தாலே அவற்றினுடைய ஸுக2து3:க்கா2நுப4வப்ராப்தி ஈஶ்வரனுக்குமுண்டென்று சொல்லுகிறாயாகில் என்றபடி. p,q 4. ''ந வைஶேஷ்யாத்'' என்றதுக்கு அர்த்த2ம் (கூடாதித்யாதி3) 4. ''ஸம்போ4க3ப்ராப்திரிதிசேந்ந வைஶேஷ்யாத்'' அஸ்ய ஸூத்ரஸ்ய பா4ஷ்யம் — 5. ''ஜீவஸ்யேவ பரஸ்யாபி ப்3ரஹ்மணஶ் ஶரீராந்தர்வர்த்தித்வமப்4யுபக3தஞ்சேத் தத்3வதே3வ ஶரீரஸம்ப3ந்த4ப்ரயுக்த ஸுக2து3:க்கோ2பபோ4க3ப்ராப்திரிதி சேத், தந்ந, ஹேதுவைஶேஷ்யாத். ந ஹி ஶரீராந்தர்வர்த்தித்வமேவ ஸுக2து3:கோ2பபோ4க3ஹேது:. அபிது புண்யபாபரூபகர்மபரவஶத்வம். தத்3தி4 அபஹதபாப்மந: பரமாத்மநோ ந ஸம்ப4வதி. தத2ா ச ஶ்ருதி: — 1. 'தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்3வத்த்யநஶ்நந்நந்யோ அபி4சாகஶீதி' இதி''இதி. q,r ப்ரவேஶஹேது விஶேஷந்தன்னை உபபாதி3க்கிறார் (இவனைப்போலே இத்யாதி3) s உபபாதி3தமான ப்ரவேஶஹேதுவிஶேஷந்தன்னை லௌகிகத்3ருஷ்டாந்தத்தாலே த்3ருடீ4கரிக்கிறார் (சிறைக்கூடத்திலே இத்யாதி3) t யுக்திதஸ் ஸாதி4தேऽர்த்தே2 ப்ரமாணம் த3ர்ஶயதி(ஸமாநம் வ்ருக்ஷமிதி)I...t,z''(சேதநர்க்குஅசித்3க3தமான

ஜீ—சேந்ந வைஶேஷ்யாத்'' என்ற ஸூத்ரத்தை உட்கொண்டு உக்தார்த்த2விவரணம் (எல்லாம் செய்தாலும் இத்யாதி3) o (அப்படி இவனுக்குங்கூடாதோ? என்னில்) என்கிறது.4. ''ஸம்போ4க3ப்ராப்திரிதி சேத்'' என்றதின் அர்த்த2ம். p, q 4. ''ந வைஶேஷ்யாத்'' என்றதின் அர்த்த2ம் (கூடாது இத்யாதி3) ஸூத்ரார்த்த2ஸ்து - பா4ஷ்யே, 5. ''ஜீவஸ்யேவ பரஸ்யாபி ப்3ரஹ்மணஶ் ஶரீராந்தர்வர்த்தித்வமப்4யுபக3தஞ்சேத் தத்3வதே3வ ஶரீரஸம்ப3ந்த4ப்ரயுக்த ஸுக2து3:க்கோ2பபோ4க3ப்ராப்தி: இதி சேத், தந்ந; ஹேதுவைஶேஷ்யாத். நஹி ஶரீராந்தர்வர்த்தித்வமேவ ஸுக2து3:க்கோ2பபோ4க3ஹேது:, அபிது புண்யபாபரூபகர்மபரவஶத்வம். தத்3தி4 அபஹதபாப்மந: பரமாத்மநோ ந ஸம்ப4வதி. தத2ா ச ஶ்ருதி:. 1. 'தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்3வத்த்யநஶ்நந்நந்யோ அபி4சாகஶீதி' இதி'' இதி. q,r ஹேதுவிஶேஷம் ஏதென்ன (இவனைப்போலே இத்யாதி3) s உபபாதி3த ப்ரவேஶ ஹேதுவிஶேஷத்தை லௌகிக த்3ருஷ்டாந்தேந த்3ருடீ4கரோதி (சிறைக்கூடத்திலே இத்யாதி3) t ஸாதி4தேऽர்த்தே2 ப்ரமாணம் த3ர்ஶயதி (ஸமாநம்

ஈ—(ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே-அநஶ்நந்நந்ய:) என்றுநின்றதிறே. (புலனைந்துக்கும் u சொலப்படான்) ஶ்ரோத்ராதி3கள் ஐந்துக்கும் விஷயதயா சொல்லப்படான் என்னுதல்; v அன்றிக்கே, நினைத்திறே சொல்லுவது. அச்சொலவுக்கும் முன்பில் நினைவை லக்ஷித்து. v2 அவற்றால் ஸ்மரிக்கப்படான் என்னுதல். பின்னை அவன்தான் இருக்கும்படியென் ? என்னில் w (உணர்வின்மூர்த்தி, w2 ப்ரகாஶத்தையே வடிவாகவுடையனாயிருக்கும். / (மூர்த்திஶப்3த3ம் - ஸ்வரூபவாசி) x எல்லாம் செய்தாலும் இவற்றோடுண்டான ஸம்ஸர்க்க3ம் மெய்யாயிருக்க, இவற்றினுடைய தோ3ஷம் தன்பக்கல் தட்டாதபடியிருக்கும் என்னும் இது கூடுமோ? என்னில் y (ஆவிசேர் இத்யாதி3) ஆவியுண்டு-ப்ராணாஶ்ரயமான ஶரீரம். அத்தோடு சேர்ந்திருந்துள்ள, உயிருண்டு-ஆத்மா. அதின்பக்கல் அந்த ஶரீரக3தமான பா3ல்யயௌவநாதி3களொன்றாலும் ஒரு ஸம்ப3ந்த4முமில்லையாம்படியாக அநுஸந்தி4க்கிற அநுஸந்தா4நமானது அந்த ஆத்மாவுக்குக் கூடாநின்றபின்பு, அப்பொருள் z அவனையும் கூடத் தட்டில்லை. இங்ஙனன்றிக்கே, "இதுக்கு வேறேயும் a இரண்டுபொருள் சொல்லுவர்கள்" என்று அருளிச்செய்வர்-b அவன்பக்கலிலே b2 ப4க்தியுண்டாகில் அவனைக் கிட்டலா

அ—என்று தொடங்கி) (அநஶ்நந்நந்ய:) என்னுமளவும்-'ஆவிசேர்' இத்யாதி3யான மூலவாக்யத்தால் பரிஹரித்ததின்மேலே வந்த ஶங்காபரிஹாரமாகையாலே, 'அப்பொருள் அவனையுங்கூடத் தட்டில்லை' என்ற வாக்யாநந்தரம் அநுஸந்தி4த்தால் மிகவும் சேரும்" என்று அருளிச்செய்வர். u,v (அன்றிக்கே இத்யாதி3) "சொல்" என்கிறது - நினைவை லக்ஷிக்கிறது. புலனைந்துக்கும் ஸ்மரிக்கப்படாதவன் - இந்த்3ரியஜந்யாநுப4வஜந்யஸ்ம்ருதிக்கு விஷயமாகாதவன், ஶப்3த3வாசி ஶப்3த3ம்-ஶப்3த3ஜநகஸ்ம்ருதியை லக்ஷிக்கிறது. w2 ப்ரகாஶத்தையே-ஜ்ஞாநத்தையே. w உணர்வின் மூர்த்தி - உணர்விலே உண்டான மூர்த்தியையுடையவன், அதாவது - ஸ்வரூபத்தையுடையவன் என்றபடி. x "ஆவிசேர்" என்கிற உத்தரார்த்த4த்துக்கு அவதாரிகை (எல்லாம் செய்தாலும் இத்யாதி3) y உயிரினுள் - உயிரினிடத்திலே. ஆல் - அசை. பாவனை - அநுஸந்தா4நம். "அதனை" என்றது - அந்த ஆத்மாவுக்கு என்றபடி. "அவனையும் கூடலாம்" என்றது-பரமாத்மாவுக்கும் கூடலாம் என்றபடி. a (இரண்டுபொருள் சொல்லுவர்கள்) இதி ப்ரதிஜ்ஞாய, அர்த்த2த்ரயாபி4தா4நம் ப்ரதிபாத3நவேளாயாம் அதி4கார்த்த2ஸ்பு2ரணாத்3வா; ஏகஸ்யைவ - ஸாத4நாந்தரகோடி:, ப்ரபத்திகோடிரிதி கோடித்3வயவிவக்ஷயா வா. b (அவன்பக்கலிலே ப4க்தியுண்டாகில் இதி) ஆவியிலே-ஜீவாத்மாவிலே, சேர்ந்திருக்கிற உயிரினிடத்திலே-A உலகங்கட்

